MADRAS

“கிராம அபிவிருத்தி”

ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர் ரிடைர்ட் டிப்டி கலெக்டர்,
ஆபீஸ்: 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV அக்டோபர், 1929 நெ 10

பொருளடக்கம்.

நெ		பக்கம்.
89.	தண்டு தனுக்குகள்.	229
90.	பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.	230
91.	நாட்டுப்புறங்களிலும் வியவஸாய ஸ்தலங்களிலும் உள்ள கழிவுப் பொருள்களை எருச்செய்வதில் உபயோகித்தல்.	234
92.	கிராமச் சீரமைப்பு முயற்சிகளைப்பற்றின குறிப்பு.	238
93.	வியவஸாயிகளின் முன்னேற்றம்.	240
94	விதியை மதியால் வெல்லர்—ஒரு கதை	245
95.	பொது விஷயக் குறிப்பு.	251
96.	மதிப்புரை	255
97.	ஓர் விஞ்ஞாபனம்	257

வருடச் சந்தா:	உள்நாடு ரூ 3	வெளிநாடு ரூ 4 8 0
தனிப்பிரதி:	,, அணா 6	,, அணா 8

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட், போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

80 வருஷகாலமாக சென்னையிலே, சிறப்பு வாய்ந்த ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா டவுன் கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசுநெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே இமையப்பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகிவருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப் படுத்தி இன்புறுங்கள்.

அசல் ஷண்முகம்பொடி விலை ஜாபிதா.

முதல்தரம் ஒரு வீசை ரூ 4-4-0 இரண்டாந்தரம் ரூ 3-4-0

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்.

இதனால் ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், உள்படக் கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப் படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால் தூள் முழுதும் சுகந்தமாய்விடும்.

	விலை			தபால் கூலி			பாக்கிங்			தொகை		
3 புட்டி	0	9	0	0	4	0	0	1	0	0	14	0
6 புட்டி	1	2	0	0	5	0	0	1	0	1	8	0
12 புட்டி	2	4	0	0	8	0	0	1	0	2	13	0

ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ்: 22, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV அக்டோபர், 1929 நெ 10.

துண்டு துணுக்குகள்

எலுமிச்சம்பழ ரசத்தை அதிகமாகச் சாப்பிடுவதால் ஆங்கில நாட்டில் நோய் குறைந்து, சுகம் வளர்ந்து வருகிறதாம்.

வல்லாரையை அடிக்கடி சாப்பிட்டால் மூளைக்குச் செழிப்பு ஏற்படுமாம். இதற்கு தெலுங்கில் சரஸ்வதி ஆக்கு அல்லது பிரமி என்று பெயராம். அறிவை வளர்ப்பதால் அறிவுத் தெய்வமான ஸரஸ்வதியின் பெயர் அதற்கு வந்ததாம்.

தேங்காயில் ரேடியம் என்ற அரிய பொருள் இருக்கிறதென்று 'நாளொன்றுக்கு இரண்டு தேங்காய் உண்டு உயிர்வாழ்வது' என்ற அரிய நூலை எழுதிய ஒரு ஜர்மானியர் கூறியிருக்கிறார். ரேடியம் என்பது பொன்னைவிடப் பன்மடங்கு உயர்ந்தது. பூலோக முழுமையிலுமே சில அவுன்ஸ் ரேடியந்தான் இருக்கிறது.

பூனையானது வேறு பல ஜீவப்பிராணிகளைப்போல நோயைப் பரவச்செய்வது மாத்திரமின்றி மனிதனைக் கண்ணால் உற்று நோக்கினாலே விஷங்கொடுக்குமென்று பிரகிருதி தத்துவநூல் ஒன்றில் காணப்படுகிறது.

ஜாவா தீவில் ஒரு விதமான புஷ்பம் எலிகளைப் பிடித்துவிடுகிறதாம். ஒரு மைல் தூரம்செல்ல நத்தைக்கு 14 நாள் 4 மணி நேரமாகுமாம்.

ஹீனஸ்திதியும், ஆஹாரக் குறைவும், ஸரிஸமானமற்ற மற்ற ஆஹாரமும் முக்கியமாய்த் தாழ்ந்த ஜாதியாரைத் தாக்கி இந்தியர்களுடையதேக பலத்தைக் குன்றச் செய்து அநேக நோய்களுக்கு அவர்களை உள் படுத்துகின்றன.

தோட்ட வேலையினால் ஆரோக்கியம், ஐசுவரியம், தீர்க்காயுள் இவையாவும் ஸித்திக்கும்.

ஜீவனோபாயமில்லாதபடித்த சிறுவர்கள் தோட்டவேலையைலாபகாமான தொழிலாக எடுத்துக்கொண்டு சுகஜீவிகளாக வாழக்கூடும்.

பாலை அதிகமாகக் கொதிக்க வைத்தால் அதிலுள்ள பாஸ்பேட் குறைந்து போம். ஆகையால் அதற்குள்ள ஆகாரகுணம் போய்விடும். பாலைச்சாப்பிடும் பொது அதைக்கொஞ்சம் கொஞ்சமாகச்சாப்பிட வேண்டும்.

தேங்காய் எண்ணையானது டைபாய்டு கிருமிகளையும், மற்ற விஷநோய்க்கிருமிகளையும் கொல்லக்கூடிய சக்தியை உடையது.

நாட்டுப்புறத்தில் நிர்மலமான ஆஹாயத்தின் கீழ் சிநேகிதர்களோடு ஒருநாள் வஸிப்பது பூலோகத்திலுள்ள எல்லாமருந்துகளையும் காட்டிலும் ஆயுளை விருத்தி செய்யக்கூடியது.

பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் முயர்ச்சிகளைப் பற்றின ரெவினியூ போர்டாரின் 1928-29 வருஷத்திய ப்பிரகடனம் நமக்குக் கிடைத்தது. 1928-29இல் நம்முடைய மாஹாணத்தில் 1102 பஞ்சாயத்துகள் இருந்தன. பஞ்சாயத்துக் காடுகளின் மொத்த விஸ்தீரணம் $3444\frac{3}{4}$ சதுரமைல்களாயிருந்தது. மொத்த அஸஸ்மெண்டு ரூ. 1,59,493-15-0 ஆகவிருந்தது. இதற்கு முந்தியவருஷத்தில் 1130 பஞ்சாயத்துகள் இருந்தன. மொத்த விஸ்தீரணம் 3353 ஆகவிருந்தது. மொத்த அஸஸ்மெண்டு ரூ. 1,57,256 ஆகவிருந்தது. சில பஞ்சாயத்துகள் இதர பஞ்சாயத்துகளுடன் சேர்க்கப்பட்டமையால் பஞ்சாயத்து சங்கியை குறைந்திருப்பதாகக் காணப்படுகிறது. கல் யூனிட்கள் $6\frac{3}{4}$ லக்ஷங்களிலிருந்து $7\frac{1}{2}$ லக்ஷங்களாகப் பெருகியிருக்கின்றன. மேச்சல் கட்டணவிகிதங்கள் $2\frac{1}{2}$ அணாவிலிருந்து ரூ 1-4-0 வரையிலிருந்திருக்கின்றன. விகிதங்கள் ஏன் இவ்வளவு உயர்த்தப்பட்டிருக்க வேண்டுமென்பது நமக்குத் தெரியவில்லை. காடுகளின் சொந்தக்காரர்களுக்கு மிகுந்த கஷ்டமிதனால் ஏற்பட்டிருக்கவேண்டும். பஞ்சாயத்துகள் முந்திய வருஷத்தில காட்டிலும் 1928-29 இல் 2900 குற்றங்களை அதிகமாக ரிபோர்டு செய்திருக்கின்றன, 7707 குற்றங்கள் ரூ 65702-6 வுக்கு கம்பவுண்டு செய்யப்பட்டன. குற்றங்களின் சங்கியையும் தொகையும் முந்திய வருஷ விவரங்களைப்போல் இரண்டு மடங்குகளாக ஆய்விட்டன. பஞ்சாயத்துகள் தங்களுக்கு கம்பவுண்டிங்கு பீஸ்கள் கொடுக்கப்படுகிற தில்லையென்று நெடுநாளாகக் குறை கூறுகின்றன. சென்ற பாரெஸ்டு பஞ்சாயத்துக் கன்பரன்ஸிலும் இக்குறை கவர்மெண்டுக்கு வணக்கமாக தெரிவிக்கப்பட்டது. கவர்மெண்டார் அவ்வேண்டுகோளுக்கு இணங்க

199387

MADRAS

வேண்டுமென்று நாம் வணக்கமாய்க் கேட்டுக்கொள்வோம். குற்றங்களைக் கம்பவுண்டுசெய்கிற அதிகாரம் 31 பஞ்சாயத்துக்களுக்குதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1102 பஞ்சாயத்துகளில் 144 பஞ்சாயத்துகள் தான் நன்றாய் வேலை செய்திருக்கின்றனவாம், 622 பஞ்சாயத்துகள் கூடியவரையில் சரியாகவே வேலை செய்திருக்கின்றனவாம், 145 பஞ்சாயத்துகள் சீர்வழியில் வரக்கூடுமாம், 191 பஞ்சாயத்துகள் சரியாய் வேலை செய்கிறதில்லையாம். நன்றாய் வேலை செய்கிற பஞ்சாயத்துகள் பஞ்சாயத்து மொத்தத்தில் அரைக்கால் பாகமாகவிருப்பது விசனிக்கத்தக்கது. அதுவே குற்றங்களைக் கம்பவுண்டு செய்கிற அதிகாரம் பஞ்சாயத்துகளுக்கு அதிகமாகக் கொடுக்கப்படாமலிருப்பதற்குக்காரணமாய் இருக்கக்கூடும். 1928-29 இல் 344 பஞ்சாயத்துகள் ரூ. 20603-14-3 யைச் சிலவிட்ட புதிய கிணறுகளை வெட்டிப்பழைய கிணறுகளைப் பழுது பார்த்திருக்கின்றன. 160 பஞ்சாயத்துகள் ரூ 10526-3-4 யைச் சிலவிட்டு நாகதாளி முதலிய முள்ச்செடிகளை வெட்டியெடுத்திருக்கின்றன. அநேக பஞ்சாயத்துகள் ஆவரம்பட்டை யுற்பத்தியில்மிகுந்த சிரத்தையை யெடுத்திக் கொண்டிருக்கின்றன. பாரெஸ்டு பஞ்சாயத்துகள் தேன் ஈக்களை வைத்து தேனையுண்டாக்குவதிலும், கோழிகளை வளர்த்து முட்டைகளை வியாபாரம் செய்வதிலும் அமைந்தால் அவைகள் நல்ல ஸஹாய வரும்படிகளை அடையக்கூடும். ரெவினியூ போர்டார் கலெக்டர்களுக்கு இதுவிஷயமாகத் துண்டுத்திரவுகளை அநுப்பவேண்டுமென்றுகேட்டுக்கொள்வோம். கோயம்பத்தூரில் இராமநாதபுறத்தில் ஒய். எம். ஸி. ஏ. ஸ்தாபனத்தில் இத்தொழில்களின் சம்பந்தமாக நிரூபணங்களும் போதனைகளும் நடத்தப்படுகின்றன. தேன் தொழில் அதிகசிலவுள்ளதல்ல. அப்படிப்போலவே கோழிவளர்ப்பிலும் அதிகச்சிலவேகிடையாது. பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்கள் நாம் முன் சஞ்சிகையில் இவைகளின் சம்பந்தமாக எழுதியிருக்கும் கட்டுரையை வாசிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

செங்கல்பட்டு ஜில்லாவில் நாகதாளிபுதர்களை அழிப்பதற்குப் பலவித உபாயங்கள் அநுஸரிக்கப்படுகின்றன. ஆர்ஸனிக் பெண்டாக்ஸைடையும், ராபர்ட்ஸ் பியர் பாய்ஸனையும் உபயோகித்துப் பார்க்கிறார்கள்.

பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்கள் மாடுகளையுடையவர்கள். காடுகள் மேய்ச்சலுபயோகத்திற்காகப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட்

டிருக்கின்றன. அவர்கள் நல்லமாடுகளை உண்டாக்கி பஞ்சாயத்து கிராமங்களின் மாட்டுக்கஷ்டத்தை நிவர்த்தி செய்யக்கூடும். நல்ல சினைக்காளைகளைப்பஞ்சாயத்தார்கள் வாங்கிவைத்துக்கொண்டால் கவர்மெண்டார் அவைகளின் போஷணநிமித்தமாக அவர்களுக்குப் பணங்கொடுக்கத்தயாராக விருக்கிறார்கள். கவர்மெண்டார் இது விஷயத்தில் சில நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவையாவன: காளைகள் பொலியவிடுகிற பொழுது $2\frac{1}{2}$ வருஷங்களானவைகளாக விருக்கவேண்டும். அவைகள் நன்றாய்ப்போஷிக்கப்பட்டு ஸம்ரக்ஷிக்கப் படவேண்டும். அவைகள் நடத்திய பொலிவுகளின் ஜாப்தாவொன்று வைக்கப்படவேண்டும். பொலிவு ஒன்றுக்கு 8 அணா வீதம் பணத்தை காளையையுடையவர்கள் பசுக்களின் சொந்தக்காரர் களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். வியவஸாய டிப்டிடைரெக்டர் அவர்களாவது மாட்டுவைத்திய இலாகாவாவது காளைகளை முன்னதாகப் பார்வையிட்டுத்திருப்தியான பிறகுதான் போஷணப்பணமானது கவர்மெண்டாரால் கொடுக்கபடுமாம்.

மொத்தத்தில், பாரெஸ்டுபஞ்சாயத்துகளின் வேலைகள் முந்திய வருஷங்களில் காட்டிலும் அதிக ஒழுங்காகவே நடந்திருக்கின்றனவென்று ரெவினியூ போர்டார் மொழிகிறார்கள். பாரெஸ்டுப்பஞ்சாயத்தார்களுள் அநேகர் கல்வியில்லாதவர்களாதலால் அவர்களுடைய வேலைகளில் தப்புத்தவறுகள் அநேகம் இருக்கக்கூடும், கலெக்டர்களும் டிவிஷனல் ஆபீசர்களும் பஞ்சாயத் களுக்கு அன்புபாராட்டி அவைகளைச் சரியான ஒழுங்கில் முயர்ச்சிசெய்யும்படிச் செய்யவேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக்கொள்வோம். சென்னை பாரெஸ்டுப்பஞ்சாயத்துகளின் பிரதிநிதிகள் மாஹாண கவர்மெண்டின் பாரெஸ்டுபஞ்சாயத்து விஷய அங்கத்தினராகிய கனம். எ. ஒய். ஜீ. காம்பெல் அவர்களின் முன்பாக பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் குறைகளை முறையிட்டுக்கொண்டார்கள், ராவ் பஹதூர் பி. முனிஸாமி நாயடு அவர்களும், மிஸ்டர் எ. இராஜகோபால ரெட்டி அவர்களும், "ரூரல் இந்தியா" பத்திராதிபர் மிஸ்டர் ஆர்காடு சுவாமிநாத ஐயர் அவர்களும் பிரதி நிதிகளாகச் சென்றனர். ராவ்பகதூர் பி. முனிசாமி நாயுடு அவர்கள் தலைமை வஹித்து குறைப்பத் திரத்தை கனம். காம்பெல் அவர்களிடம் கொடுத்து வாதித்தார். குறைப்பத்திரத்தில் அநேக குறைகள் குறிக்கப்பட்டன, பாரெஸ்டுப்பஞ்சாயத்துகளுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்தைக்

கொடுக்க வேண்டுமென்றும், பஞ்சாயத்தார்கள் பஞ்சாயத்துகளிலேயே சரியானபடி தேறுதல்கள் மூலமாகவே ஏற்படுத்தப்படவேண்டுமே யொழிய தற்சமயத்தில் போல் கலெக்டர் அவர்களின் முன்னிலையில் வந்த கிராமத்தார்களைக் கொண்டே தேர்ந்தெடுக்கப்படக்கூடாதென்றும், கம்பவுண்டிங்கு கட்டணங்களை விதிக்கிற அதிகாரம் எல்லாப்பஞ்சாயத்துகளுக்குமே கொடுக்கப்படவேண்டுமென்றும், அத்தொகைகளை பஞ்சாயத்துகளே அடையவேண்டுமென்றும், ஹாரன் கம்மிட்டியாரால் நான்காவது வகுப்புக்காடுகள் என்று பகுக்கப்பட்ட காடுகளெல்லாம் பாரெஸ்டுப்பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்கப்பட வேண்டுமென்றும், குத்தகைகள் நெடுங்கால குத்தகைளாக விருந்தால் தான் பஞ்சாயத்துகள் காடுகளை சீர்திருத்திச்சரியான ஸ்திதியில் அமைத்துத் தக்கவரும்படிகளை யடையக்கூடுமென்றும், குத்தகைத் தொகைகள் ஒரேதடவையில் நிர்ணயிக்கப்பட்டு வெகுகாலம் வரையில் மாற்றப் படாமலிருக்கவேண்டு மென்றும், பஞ்சாயத்துகள் எந்தெந்த வருஷங்களில் தக்க வரும்படிகளை அடைகிறதில்லையோ அவ்வருஷங்களிலெல்லாம் கவர்மெண்டார் குத்தைகைப்பணத்தில் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்றும் குத்தகைகளில் விதிக்கப்பட்ட சங்கியைகளுக்கு மேல் பட்ட மாடுகள மேய்ந்தால் வசூலிக்கப்படும் கட்டணங்களைக்கவர்மெண்டார் பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கவேண்டுமென்றும், பஞ்சாயத்துக் காடுகளின் அத்துக்குள் உள்ள கிளிஞ்சல் துருக்கல் கருங்கல் ஸ்தலங்களிலிருந்து அச்சரக்குகள் வெட்டப்பட்டால் அவைகளின் நிமித்தம் விதிக்கப்படும் கட்டணங்களைப் பஞ்சாயத்துகளே அடையவேண்டுமென்றும், கூப்கள் கிராமங்களை யொட்டி ஏற்படுத்தப்படக்கூடாதென்றும், பாரெஸ்டுப்பஞ்சாயத்தார் யூனியனுக்கும் ரூரல் இந்தியாப் பத்திரிகைக்கும் கவர்மெண்டார் திரவ்விய ஸஹாயத்தைச்செய்ய வேண்டுமென்றும், குறைப்பத்திரத்தில் விவரிக்கப்பட்டன. கனம் காம்பெல் அவர்கள் வெகுகவனமாய் பிரதிநிதிகளின் மொழிவைக் கேட்டுக் கொண்டு பத்திரத்தில் கண்ட குறைகளைப்பற்றிக் கவனித்து ஆலோசித்து கூடியவரையில் குறைகளை தீர்க்க முயலப்போவதாக பதிலளித்தார்

நாட்டுபுறங்களிலும் வியவஸாய ஸ்தலங்களிலும் உள்ளகழிவுப் பொருள்களை எருச்செய்வதில் உபயோகித்தல்

[டாக்டர் கில்பர்ட். ஜே. பௌலர் டி எஸ்ஸி. அவர்கள் கோயம்புத்தூர் வியவஸாயகாலசாலையின் வருஷாந்தரக்கொண்டாட்ட தினத்தில் செய்த உபந்நியாஸம்]

முதல்முதலில் நாட்டுப்புறங்களிலும் வியவஸாய பூமிகளிலும் ஏற்படக்கூடிய கழிவுப்பொருள்களை எப்படி உபயோகிக்கலாமென்று யோசிப்போம். பிறகு பட்டணங்களில் ஏற்படும் அவ்விதப் பொருள்களைப்பற்றிப் பேசுவோம்.

இந்தியாவில் நடைபெறும் கோதுமை சாகுபடியைப்பற்றிப் பேசுவோம். அதிகமாசூலை குறைவான விஸ்தீர்ணத்தில் குறைவான பாசனத்துடன் உண்டாக்கவேண்டுமென்பது எல்லாவியவஸாயிகளின் நோக்கமாகவிருக்கிறது. மண்ணில் அதிகமாக மலமூத்திர வஸ்துக்கள் நிறைந்திருந்தால் அதில் சாதாரணமாய் உண்டாகக்கூடி மாசூலின் அளவைக்காட்டிலும் 30 மடங்கு அதிகமாக மாசூல் உண்டாகிறது. சித்தூர் ஸமஸ்தானத்தில் ஒரு உபயோகமற்ற நிலமிருந்தது. அதில் விளைச்சல் சரியாக ஏர்பட்டதேயில்லை. மிஸ்டர் ஹவர்டு அவர்களின் யோசனைகளின்படி அந்நிலமானது தயாரிக்கப்பட்டதில் அதில் இப்பொழுது கோதுமை மாசூல் திருப்திகரமாக ஏர்படுகிறது. இப்படி நல்லமாசூல்கள் ஏர்படவேண்டுமானால் நிலமானது நன்றாய்உழப்படவேண்டும், அவைகளிலுள்ள பூண்டுகள் பிடுங்கி எடுக்கப்படவேண்டும். உழப்படுவதில் டிராக்டர்களை உபயோகிக்க வேண்டுமென்பதில்லை. மாடுகள் தொகைத்தாலே நிலம்தயாராகிவிடும் புல் பூண்டுகளும் மேலேவந்து அழுகிஎருவாக ஏர்பட்டுவிடும்.

இவ்விததிறமான பயிர்வழி அநுசரிக்கப்பட்டால் மாசூல் அதிகமாக உண்டாவதோடு அதிகவைக்கோலும் செத்தைகளும் கூட உண்டாகும், அவைகள் எருவிற்கு உபயோகமாகும்.

ரோதாம் ஸ்டிடில் சாணி எருவைப்போன்ற கலப்பெருவைத்தயாரிப்பதற்குச் சில முறைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன; நைட்ரோஜனும் கார்பனும் எருப்பொருள்களிலிருக்க வேண்டுமென்பதும், வைக்கோலும் இதர கார்பனையுடைத்தாயிருக்கிற எருப்பொருள்களும் காற்றிருந்தால் எருவாகக்கலந்து போகுமென்பதும், எருப்பொருள்கள் நன்றாய்க்கலந்த பின்புதான் நைட்ரோஜன் வஸ்துக்களை அவைகளுக்கு உபயோகப்படவேண்டுமென்பதும் அவ்விடத்தில் நிரூபிக்கப்படுகிறது.

எருக்கூட்டானது கான்பூரில் வெகுசீக்கிறத்தில் தயாரிக்கப்படு-

கிறது. வைக்கோல் முதலிய எருப்பொருள்கள் கையினாலேயே துண்டு துண்டுகளாக நறுக்கப்பட்டுமாட்டுச்சாணிமூத்திரக்கூட்டில் போடப்பட்டு கிளரப்படுகின்றன. எல்லாவஸ்துக்களும் நன்றாய்க் கலந்து புளித்து ஒரே கலப்பாகிவிடுகின்றன. இவ்விதக்கலப்பு 3 4 அடிஉயரம்வரையில் குவிக்கப்பட்டு அடிக்கடி கிளரப்பட்டால் சூடாகவிருக்கும். அப்படிச்சூடாகவிருப்பதால் அதிலுள்ள பூச்சிமுட்டைகள் நசித்துவிடும். சூடுதணியுமானால் இன்னும் கொஞ்சம் வைக்கோல் முதலிய எருத்துண்டுகள் அதில்போடப்படவேண்டும். சூடுமுன் போல் அதில்ஏற்படும். மேல்மேலும் புதிய சாணி மூத்திரக்கலப்பும் அடிக்கடி இவ்வெருக்கலப்பிற்கு சேர்க்கப்படவேண்டும். குப்பலின் அடியில் எருநன்றாய்த்தயாராகிவிடும்.

கலப்பெருவிற்கு வெகுமுக்கியமானது மலம். அதில்லாத பக்ஷத்தில் மாட்டுமூத்திரம் வெகுதிறமானது. மாட்டுமூத்திரத்தில் நைட்ரோஜன் நிரம்ப இருப்பதால் இதை வீண் போகவிடாமல் உபயோகிக்கவேண்டும்.

மேற்கூறியபடி தயாரிக்கப்பட்ட எரு டாக்காவிலும் இந்தூரிலும் நிலங்களிற்கு உபயோகிக்கப்பட்டதில் மாசூல்கள் வெகுதிறமாய் ஏற்பட்டிருக்கின்றன.

சிலர் எருப்பொருள்களை மேற்ச்சொல்லியபடிக் கூட்டாமலே பயிர்களுக்கு உபயோகிக்கலாமென்றும், அவைகள் அவ்விதமாக உபயோகிக்கப்பட்ட பின்பு மண்ணில் அழுகிப் பயிருக்கு உபயோகப்படுமென்றும் நினைக்கிறார்கள். இந்திய வியவஸாயிகளும் விதைத்த பிறகு எருப்பொருள்களையும் தழைகளையும் மண்ணிற்குச்சேர்க்கிறார்கள். இந்த முறை தப்பானமுறை. பயிர்முளைத்து வருகையில் அதற்கு பண்சாதகப்படவேண்டியிருக்கும் பொழுது அது இந்த எருப்பொருள்களை அழுகச்செய்வதில் உழைக்கவேண்டியதாக விருந்தால் அது மாசூலை விளைப்பதில் அதிகமுயர்ச்சியைச்செய்ய முடியாது. ஆகவே, எருப்பொருள்களை முதலில் எருவாகக்கூட்டுவது அவசியமாயிருக்கிறதோடு அம்முயர்ச்சி பயிர்நிலத்திற்கு வெளியிலேதான் நடத்தப்படவேண்டுமென்பதும் அவசியமாகவிருக்கிறது நிலத்தில் விதைத்தவுடன் எருக்கூட்டுத்தயாராகவிருக்கவேண்டும். சீனர்கள்தான் எருவை முன்னதாகவே தயாரிக்கவேண்டிய அவசியத்தை முதல்முதலில் கண்டறிந்தார்கள். அவர்களின் பயிர்வழிகள் வெகுதிறமானவைகள். எல்லாசாக வஸ்துக்களும் புண்

ணுக்குகளும் எருச்செய்வதில் உபயோகிக்கப்படக்கூடும். புண்ணைக் கைஐக்கியநாடுகளில் ஓடுகளாகவும் கட்டிடங்களைக்கட்டுவதற்குச் சுண்ணாம்புச்சாந்துபோலும் தயாரிக்க எத்தனிக்கிறார்கள்.

லின்ஸீடிலிருந்து எண்ணெயைப்பிழிந்த பின்பு அதன் மிச்ச பாகத்திலிருந்து ஜூட்டைப்போன்ற கோணிநெய்யக்கூடிய நார்களைத் தயாரித்துக் கொள்ளலாம், தக்காளிச்செடிகளைப் பயிரிட்டுப்பழங்களையும் அப்பழவஸ்துக்களையும் ஐரோப்பியதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யலாம். தக்காளிப்பழங்களை ஐரோப்பாவிற்கு அனுப்ப வேண்டிய விஷயத்தில் அவைகளை உரித்துத்தகரடப்பிகளுள் போட்டு அனுப்புவது தான் நல்லது. அப்பழங்களின் தோல்கள் கோழிக்குஞ்சுகளுக்கு நல்லஆகாரமாக உபயோகிக்கப்படலாம். கோழிகளைவளர்த்துக் கோழிமுட்டைகளையும் வியாபாரம் செய்வது இன்னொருலாபகரமான தொழில்.

நமதுதேசத்தில் ரோட்டுகள் நல்லஸ்திதியில் இல்லாமலிருப்பதற்குக் காரணம் மாடுகள் வலிவில்லாத வண்டிகளுக்கு உபயோகிக்கப்படுவதுதான். வலிவில்லாதவண்டிகளும், சக்கிரங்களும் முறிந்து போவதாலேயே கணக்கிடக்கூடாத உயிர்நஷ்டங்களும், பொருள் நஷ்டங்களும் நம்முடைய தேசத்தில் விளைகின்றன. நல்ல வலிவுள்ள இரும்புகட்டு பொட்டசக்கிரங்களையுடைய பெரியவண்டி கள் உபயோகிக்கப்பட்டால் மேற்கூறியபடி அபாயங்கள் ஏற்படமாட்டா.

இதுவரையில் நாட்டுப்புறங்களிலும் வியவஸாய பூமிகளிலும் ஏற்படுகிற கழிவுவஸ்துக்களை உபயோகிப்பதைப்பற்றி விவரித்தோம். இப்பொழுது பட்டணங்களில் வீணாய்ப்போய்க் கொண்டிருக்கும் கழிவுபொருள்களைப்பற்றிப்பேசுவோம், பட்டணங்களில் கிடக்கும் கழிவுப்பொருள்கள் முக்கியமாகத் தெருக்குப்பைகளும் மனிதமலங்களும். தெருக்குப்பைகளில்கிடக்கும் பொருள்கள் காகிதத்துண்டுகளும்வைக்கோலும் சிறிதுமாட்டுச்சாணியும் தூசியும். ஆகவேஇக்குப்பையை அதில் மனிதமலத்தையோ அல்லது மாட்டு மலத்தையோ சேர்த்து அழுகவைத்தால் அதுதிறமான எருவாகும்நாஸிக்நகரத்தில் குப்பைகளை இவ்விதமாக எருவாகச்செய்கிறார்கள்.

மனிதமலமும் சாக்கடைநீரும் வீணாக்கப்படுகின்றன. பயிருக்கு இவைகளின் உபயோகத்தைப்பற்றி ஏற்கனவே அடிக்கடிசொல்லப்பட்டிருக்கிறது. ரோம்புரியில்ஸ்தாபிக்கபட்டுள்ள அகில உலக

வியவஸாய ஸதாபனத்தால் பிரசுரிக்கப்பட்டிருக்கிற விவரக்கணக்குகளைச்சற்று பார்த்தீர்களானால் மேற்கூறிய வஸ்துக்கள் தக்கப்படி உபயோகிக்கப்பட்டால் பயிர்கள் எத்தன்மையாக ஓங்குமென்பது விளங்கும். டெல்லி நகரத்தின்ஜனத்தொகை 283000 அந்த ஜனத்தொகையால் ஏற்படும்நைட்ரோஜன் 95000 ஏகர்களுக்கு தக்க கொழுமையை விளக்குமென்றால் இந்தியாதேசத்தின் எல்லாபட்டணங்களிலும் விளையும் நெட்ரோஜனின்அளவு இந்தியாவின் பயிர்பூமிகளுக்கெல்லாம் எவ்வளவு உயர்வான எருவாகுமென்பதை அறிந்து கொள்ளுங்கள். மஹாத்மாகாந்தியவர்கள் ஒரு உபந்யாஸத்தில் இந்தியஜனங்கள் தனித்தனிநபர்களில் சுத்தமாகத்தானிருக்கிறார்கள், ஆனால் சமூகத்தைச்சேர்ந்தவழிகளில் சுத்தத்தை அவர்கள் அநுஷ்டிக்கிறதில்லை என்று கூறுகிறார். அவர்சொல்வது சரியான வார்த்தைதான். நரகல்களையும்குப்பைகளையும்எருவாக உபயோகித்து அதிகவரும்படிகளை பயிர்தொழிலில் அடையாமல் அவைகளைத் தெருக்களிலும் பொது ஸதலங்களிலும் தங்கிக்கிடந்து நாறும்படி விட்டுக்கொண்டு கொசுக்களும் ஈக்களும் அவைகளில் அடையும்படிச்செய்து கொண்டு இந்தியர்கள் பலவித நோய்மூலங்களை விளைத்துக்கொள்கிறார்கள். சாக்கடைநீரில்சிலவஸ்துக்கள். கரைந்திருக்கின்றன சிலமெழுக்குப் போன்றவஸ்துகளும் கரையாதவஸ்துக்களும் அதில் மிதந்து கிடக்கின்றன. சாக்கடைநீரை ஒரு புட்டியில் ஏந்திவைத்துப் பார்த்தால் அரைஅங்குலம் மண்அடியில் தேங்குவதை நாம்பார்ப்போம். நீர்மங்கலாயிருப்பது மெழுக்கைபோன்ற வஸ்து விருப்பதால் தான். மெழுக்குப்போன்ற வஸ்து சாக்கடையில் கிடந்தமலவஸ்துதான். கலந்திருக்கிறவஸ்துவில் மூத்திரங்களிலிருந்து ஏற்பட்ட அம்மோனியா இருக்கிறது. காற்றுப்படாமல் சாக்கடைநீர்வைக்கப்பட்டால் அது நாற்ற மெடுக்கிறது.

காற்றானது சாக்கடை நீருள்ள ஒருபாத்திரத்தில் செலுத்தப்பட்டால்அந்நீரில் குமிழ்கள்கிளம்பும். அப்பொழுதுஅந்நீரில் பலமாறுதல்கள் உண்டாகும். மெழுகுபோல் மிதக்கும் வஸ்து சிறிது மணல் போன்ற துளிகளாக அடியில் பதிந்து விடும். நீர் தெளிந்து வர்ணமில்லாததாக ஏற்படும். அந்நீரில்உப்புகள், கிளோரைட்கள், நைட்ரேட்டுகள் இவைகள்தான் கரைந்து நிற்கும். சாக்கடைநீரானது அதிகமாக அதிகமாக சுத்தப்படுத்தப்பட்டால் மேற்கூறியமணல் போன்றவஸ்து அதிகமாக அதிகமாக படியும். மேற்கூறிய மணல்

போன்றவஸ்து பயிர்களுக்கு வெகு உயர்வான எருவாய் வாய்கிறது சுத்தம் செய்தால் நீர்பாசனத்திற்குபயோகமாகும்.

ஆகவே நம்முடைய தேசத்தில் கழிவுப்பொருள்களெல்லாம் வீண்போகின்றன வென்றும் அவைகளை எத்தன்மையாக உபயோகிக்கலாம் என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. கவர்மெண்டார் இது சம்பந்தமாக ஒருஆராய்ச்சி உத்தியோகஸ்தரை நியமித்து ஆராய்ச்சிகளை நடத்தவேண்டும். கலாசாலைகளின் மாணவர்களும் படித்தசிறுவர்களும் இவ்விஷயங்களில் ஊக்கத்தை யெடுத்துக் கொண்டு படிப்பில்லாத பாமரர்களாயிருக்கும் கிராமஜனங்களுக்கு உபதேசிக்கவேண்டும்

கிராமச்சீரமைப்பு முயற்சிகளைப்பற்றின குறிப்பு

[சமூகச்சீர்திருத்த ஊழியர்களில் ஒருவரால் எழுதப்பட்டது.]

சென்ற மேமாசம் 3உ யன்று அநந்தபூர் ஜில்லாவின் கலெக்டராகிய ம-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் என். கோபாலஸாமி ஐயங்கார் அவர்கள் லேபாக்ஷி கிராமச்சீரமைப்பு முயற்சி ஸ்தாபனத்தைத்திறந்தார். கனம் ராம்காஸ்பந்துலுவின் ஆலோசனையின்பேரில் உண்டுபண்ணப்பட்ட கிராமச் சீரமைப்புஸ்தாபனங்களில் இதுதான் கடைசியானது. இதற்குமுந்தியே ஐந்துஸ்தாபனங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மாஹாணக்கூட்டுறவு ஐக்கியத்தார் இவைகளைபரிபாலித்து வருகிறார்கள். லேபாக்ஷிஸ்தாபனமும் மற்றஸ்தாபனங்களைப் போலவே அவ்வூர்கனவான்கள் சேர்ந்த ஒருஸபையால் நிர்வாஹிக்கப்படும். இத்திருவிழாவிற்கு அநேககனவான்கள் விஜயம்செய்தனர். அநந்தபூர் ஜில்லாவைச்சேர்ந்த வக்கீல்களும், தாலூகா முன்சிப் அவர்களும், ஜில்லாபோர்டு தாலூகா போர்டுகள் இவைகளின் அங்கத்தினர்களும் பஞ்சாயத்தார்களும், கூட்டுறவினர்களும், ஆஜராயிருந்தார்கள். மாஹாணக்கூட்டுறவுசங்கத்தின் சார்பில் ம-ள-ள-ஸ்ரீ வெங்கடசுப்பய்யா அவர்களும் கூட்டுறவு, ஆரோக்கியம்இவ்விலாகாக்களைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்கள்.

ம-ள-ள-ஸ்ரீ கோபாலஸாமி ஐயங்கார் அவர்கள் அநந்தபூர் ஜில்லாவின் கலெக்டராக விருப்பது லேபாக்ஷி ஸ்தாபனத்திற்கு நன்மைகளை விளைக்கக்கூடியது. அவர் பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜனரலாகவிருந்தபொழுது ஜனங்களுடன்கலந்துகொண்டு கிராமோத்

தாரணவழியில் வெகுசிரத்தையுடன் பாடுப்பட்டுவந்ததை எல்லோரும் அறிவார்கள். அவர்செய்த வெகுஉயர்வான உபந்நியாஸத்தில் அவர் லேபாக்ஷி ஸ்தாபனத்திற்குத்தன்னால் எவ்வளவு ஒத்தாசையைச்செய்யக்கூடுமோ அவ்வளவையும் பரிபூரணமாகச் செய்யத்தயாராகயிருப்பதாகக்கூறினார் அநேக கனவான்களும் அத்திறப்புவிழாக்கூட்டத்தில் உயர்வான உபந்நியாஸங்களைச் செய்தார்கள். ஸ்ரீமான் வெங்கடசுப்பய்யா அவர்கள் தற்காலத்தில் கிராமங்களில் ஜனங்கள் ஒற்றுமையில்லாமலும், பொதுநல உணர்ச்சியில்லாமலும் வியாஜ்ஜியருசியோடும் இருப்பதையும், பண்டைகாலத்தில் கிராமங்கள் இப்படியில்லா மலிருந்ததையும் எடுத்துக்காட்டினார். மேனாட்டு தேசங்களிலும் ஜப்பானிலும் ஜனங்கள் ஒற்றுமை, ஐக்கிய உணர்ச்சி இவைகளை வஹித்து மனோதிடத்துடன் பாடுபடுவதால் அவர்கள் சுகத்திலும், க்ஷேமத்திலும், செல்வத்திலும் நம்முடைய தேசத்தவர்களை விடவெகு உயர்வாகயிருக்கிறார்களென்றும், அவர்களைப்போல் நம்மவர்கள் மனஉறுதியை வஹித்து பாடுபட்டால் அதேவிதமாக அவர்களும் மேன்மையை யடைவார்களென்றும் வற்புறுத்திச்சொன்னார். ம-ள-ள-ஸ்ரீ கோபாலஸாமி ஐயங்கார் அவர்கள் செய்த உபந்நியாஸத்தில் கிராமஜனங்கள் விதை, எரு, கருவி இவைகளை வாங்குகிறவிஷயத்திலும், தானியத்தைவிற்கிற விஷயத்திலும், குடிமராமத்து சுகாதார இவ்விஷயங்களிலும் கூட்டுறவை அநுஷ்டிக்க வேண்டுமென்றும் வெகுநன்றாய் உரைத்தார். லேபாக்ஷி ஸ்தாபனமானது தீண்டாஜாதியார்களின் முன்னேற்றத்திற்குப்பாடுபட வேண்டுமென்றும் கூறினார். திறப்புவிழாவில் ஆஜராயிருந்தவர்களுள் ஒருவரான வக்கீல் ஸ்ரீமான் வி. ராமசந்திரராவ்அவர்கள் வக்கீல்தொழிலை விட்டுவிட்டு ஸ்தாபனத்திற்கு சம்பளஉத்தியோகஸ்தராக உழைக்க முன்வந்திருக்கிறார். மாஹாணக்கூட்டுறவு ஐக்கியத்தார் அவரை சம்பள ஊழியராக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தென் ஆர்காடுஜில்லாவில் திருப்பாச்சனூரில் அமைந்துள்ள கிராமச்சீரமைப்பு முயற்சிஸ்தாபனத்தைச் சேர்ந்த கிராமங்களின் ஜனங்கள் ஜூலை மாதம் 27உ யன்று ராவ்பஹதூர் கே. சீதாராம ரெட்டியார் அவர்களின் தலைமையில் கண்டமானடியில்ஒருமஹாநாட்டை நடத்தினார்கள், சிலக்கிராமங்களில் பஞ்சாயத்துகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் பயிர்ச்சியையடைந்த ஒருமருத்துவச்சியை

அப்பிரதேச ஊழியத்திற்கு நியமிக்கவேண்டுமென்றும் ஐந்துகிராமங்களில் இராப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கவர்மெண்டாரைக்கேட்டு ஒருசினைக்காளையைதருவிக்கவேண்டுமென்று ஒரு பிரேரேபணை உண்டானபொழுது ரெட்டிகள் அதில் அதிகமாககவனத்தைச் செலுத்தவில்லை. செங்கல்பட்டு தென் ஆர்காடு ஜில்லாக்களில் மாடுகள் நன்றாயில்லை. மேலும் உழவு எருதுகள் அஜ்ஜில்லாக்களில் உண்டாக்கப்படாமல் வெளிஜில்லாக்களிலிருந்து அவைகளை அடைவது ஸாதாரணமாகவிருக்கிறபொழுது ரெட்டிகள் கவர்மெண்டிலிருந்து காளைகளை வாங்கிக்கொண்டு மாட்டு அபிவிருத்தியை ஏன்செய்யக்கூடாதோ தெரியவில்லை.

குஷ்டரோக விஷய ஆராய்ச்சிக்கூட்டத்தாரைச் சேர்ந்தடாக்டர் ஸந்திரா மேற்சொன்ன மஹாநாட்டில்பேசினார். அப்பிரதேசத்தில் குஷ்டரோகம் அதிகமாகயிருக்கிறதென்றும், அந்த ரோகமானது கிராமங்களில் சுத்தஜலவசதியும் சுத்த ஆஹார ஏற்பாடும் சுகாதார ஒழுங்குகளும் ஏற்பட்டால் குறைந்துபோகுமென்றும்கூறினார். அதாவது கிராமச்சீரமைப்பு முயர்ச்சிகள் நன்றாய் அங்கேநடக்கவேண்டுமென்பதைத் தான் அவர் உரைத்தார். டாக்டர் ஸந்திரா அநேக குஷ்டரோகிகளுக்கு இன்ஜெக்ஷன்களைச் செய்து நோயைஸொஸ்தம் செய்கிறார். ஜனங்கள் அவரிடத்தில் கூடுகிறார்கள் அநேக வைத்தியர்களுக்கும் அவர் தன்னுடைய முறையைக்கற்பித்து வருகிறார். கிராமச்சீரமைப்பு ஊழியர்கள் குஷ்டரோகங்களையும்கூட நன்றாய்கவனிக்கவேண்டும்.

வியவஸாயிகளின் முன்னேற்றம்

ராவ்பகதூர் ஏ. வேதாசலய்யர் அவர்கள் எழுதியது.

வியவஸாயிகளின் ஹீனதசைக்குக் காரணங்களென்னென்னவென்றும், அவைகளை நீக்குவதற்கு எவ்வித முயர்ச்சிகள்கைக்கொள்ளப்படவேண்டுமென்றும், நாம் ஆராய்ந்துபார்போம். ஆங்கிலேயர்களுடைய அரசாக்ஷிக்கு முந்திய காலத்தில் கிராம ஜனங்கள் உணவு நிமித்தமாகவும், இதரயோக க்ஷேமச்செலவுகளின் நிமித்தமாகவும், ஸர்காரின் வரிநிமித்தமாகவும் அவர்களுக்கு வேண்டிய தானியபொருள்களைத் தாங்களே பயிர்செய்து விளைத்துக்கொண்டுச் சுகமாய் வாழ்ந்தார்கள். தங்களுடைய வியாஜ்ஜியங்களைத் தீர்த்துக்கொள்கிற விஷயத்திலும்

அவர்கள் தங்களுடைய கிராமத்திற்கப்பால் போகாமல் கிராமப்பஞ்சாயத்துகளின் மூலமாகவே அவைகளைத்தீர்த்துக்கொண்டார்கள். கிராமஉத்தியோகஸ்தர்களும் சம்பளங்களை தானியரூபமாகவே அடைந்தார்கள். ஜனங்கள் கடன்களை வாங்கிச்சுகங்களை அநுபவிக்கவில்லை. அவர்கள் தங்களுடைய கிராமங்களின்மீதும், வீடுகளின்மீதும், நிலங்களின்மீதும் ஆசைவைத்துக்கொண்டும் வஸித்தார்கள். ஆங்கிலேயகவர்மெண்டார் கிராமபரிபாலனத்தைச் செய்துவந்த ஸமூகத்தின் க்ஷேமசுகத்தைக் கவனியாமலிருந்துகொண்டு மேநாட்டு வியாபாரத்தையே ஓங்கச்செய்தார்கள். ஜனங்களின் அபிவிருத்தியானது அவ்வியாபார மோங்குவதற்குத்தக்கவாறே ஸம்ரக்ஷிக்கப்பட்டது. சமூகவாழ்வு ஓங்கவேயில்லை. கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமசமூகத்தின் ஊழியர்கள் என்கிற பெருமையை வஹிக்காமல் ஆங்கிலேயகவர்மெண்டின் உத்தியோகஸ்தர்களென்கிற நினைவுடன் ஜனங்களிடத்தில் அன்பு ஆதரவில்லாமல் நடந்துகொண்டார்கள். கிராமத்தலைவர்கள் கவர்மெண்டின் வேலைக்காரர்களாக வாய்ந்து, அல்பசம்பளங்களையடைந்து கொண்டுகிராமங்களிலிருந்து மேல்வரும்படிகளையடைந்தார்கள். கிராமபரிபாலனமானது கிராமசமூகத்தின் பரிபாலனமாகவில்லாமல் அதிகாரிவர்க்கத்தாரின் பரிபாலனமாகவே யிருந்தது. கல்விமுறையே ஜனங்கள் ஸர்க்கார் உத்தியோகங்களுக்கு உபயோகப்படும்படியாகவே அநுஷ்டிக்கப்பட்டது. இந்தியஜனங்கள் ஆவலுடன் அக்கல்வியைக் கற்க ஆரம்பித்தார்கள். கல்விகற்றவர்கள் இதரதேச ஒழுங்குகளையறிந்துகொண்டு ஜனபஹுளத்திற்கு அவர்களின் கடமைகளையும் உரிமைகளையும் பற்றி உபதேசிக்க ஆரம்பித்தார்கள். இராஜாங்கவழிகள் இந்தியர்களின் அபிவிருத்திக்குத்தக்கவாறு இல்லையென்கிற அபக்கியாதி அதிகரித்து ஜனங்கள் அதைப்பற்றி அதிதீவிரமாகப்பேசத் தொடங்கவே கவர்மெண்டார் அவர்களைத்திருப்தி செய்யப்பல ஏர்பாடுகளை உண்டாக்கினார்கள். ஆனால், ஜனங்கள் திருப்தியையடையவில்லை. கிராம ஜனங்களின்நிலையுயர்த்தப்பட்டு கிராமங்கள் முன்போல் அமைந்தால்தான் ஜனங்களுக்குச் சுகமேற்படுமென்கிற விஷயம் அறியப்படவேண்டும். கிராமஜனங்கள் ஸகல அதிகாரங்களையும் வஹிக்கவேண்டுமென்பதில்லை. அவர்கள் அதிகவரும்படிகளையடைந்து தற்காலச்சௌகரியங்களையடையவேண்டும். கிராமஜனங்களின் வாழ்வு உயர்த்தப்படவேண்டுமானால், அவர்களுக்கு அதிகவரும்படி

ஏற்படவேண்டும். முன்காலத்தில் பயிர்முயர்ச்சிகளைச் செய்பவர்களே நிலச்சொந்தக்காரர்களாகயிருந்தார்கள், தற்காலத்திலோ வட்டித்தொழிலை யநுஷிடிப்பவற்களும், வர்த்தகர்களும், வியவஸாயத்தொழிலையே அநுஷ்டிக்காத இதரவகுப்பினர்களும்நிலச்சொந்தக்காரர்களாயிருக்கிறார்கள். நிலத்தைப்பயிரிட்டுப் பயிர் முயர்ச்சிகளை மேன்பார்வையிட்டுக் கொண்டுவந்த நிலச்சொந்தக்காரர்களே அற்றுப்போய் விட்டார்கள். தற்காலத்தில் நிலச்சொந்தக்காரர்கள் நிலங்களை இதரர்களுக்குக்குத்தகைக்கு விட்டுவிட்டுத்தாங்கள் வேறு ஜீவனோபாயங்களை அநுஷ்டிக்கிறார்கள். குத்தகைக்குப்பயிரிடும் ஜனங்கள் நிலங்களில் கஷ்டப்பட்டும் பயிர்செய்கிறதில்லை. அவர்கள் நிலங்களின் உற்பத்திசக்தியை உயர்த்தவேண்டுமென்றும் பாடுபடுகிறதில்லை. அவர்களும் குத்தகைகளை சுவல்பகாலம்தான் வஹிக்கிறார்கள். மேலும், அநேகர்களுக்கு வருஷம்முழுவதும் மூயர் சிசெய்ய நிலம் போதாமல் இருக்கிறது. அதுகாரணம்பற்றி அவர்கள் இதரவேலைகளிலும்அமைந்து விடுகிறபடியால் அவர்கள்பயிர்முயர்ச்சிகளில் அதிகசிரத்தையை வஹிக்கிறதில்லை.

குத்தகைகாரர்களும் பயிரூழியர்களும் கூட்டுறவு உணர்ச்சியை வஹிக்கவேண்டும். அவர்கள் பிறரிடத்திலிருந்து பணத்தைக்கடன் வாங்கிஅதிகச்செலவுகளை செய்கிறவழக்கத்தை நிறுத்தவேண்டும். கவர்மெண்டார் அவர்களுககு வியவஸாய வழிகளிலும் கூட்டுறவு வழிகளிலும் உபதேசங்களைச் செய்யவேண்டும். அவர்கள்ச் சிக்கனமாய்ச்செலவுகளைச் செய்யும்படிக்கும் போதனைகள் செய்யப்படவேண்டும்.

வியாஜ்ஜியங்கள் பஞ்சாயத்துக்கோர்ட்டுகளின் மூலமாகவே தீர்க்கப்படவேண்டும். மதுபானமும், தீண்டாமையும் ஒழிக்கப்படவேண்டும்.

பயிரூழியர்கள் நீண்டகால குத்தகைகளை அடையவேண்டும். ஸொந்தநிலக்காரகளும் அவர் அவர்களே பயிர்முயர்ச்சிகளில் அமையவேண்டும், நிலச்சொந்தக்காரர்களும் குத்தகைக்காரர்களும் பயிரூழியர்களும் ஒத்துழைத்துப் பாடுபட்டு நிலங்களிலிருந்து நல்ல உற்பத்திகளை விளைத்து, நல்வரும்படிகளை யடைந்து வாழவேண்டும். அவர்கள் சகாயவேலைகளையும் அநுஷ்டித்து இதரவரும்படிகளையும் அடையலாம். நூல்நூர்க்கலாம், தங்களுக்கு வேண்டிய வஸ்திரங்களையும் தாங்களே நெய்து தயாரித்துக் கொள்ளலாம்.

எம்மிடம் வாங்கிப் பாருங்கள்

நாணயம், சொல்தவறாமல் செய்து கொடுத்தல், சரியான நகைகள், கெம்புகள், வைரங்கள் இவைகளை நீர் நாடு வீரானால் எம்மிடம் ஒரு தடவை வாங்கிப்பார்த்தால், நாம் செய்கிற ஸகாயத்தைப்பற்றிநீர் வெகு திருப்தியை யடைவீர் என் பதில் சந்தேகமே இல்லை.

எங்களுடைய கறூர் விலை

உங்களுக்கு திருப்தியையே கொடுக்கும். வீடுகளில் உபயோகிக்கக் கூடியவையும், விசேஷகாலங்களில் வெகுமதியாக கொடுக்க யோக்யதையான வெள்ளிப்பாத்திரங்களையும் நாங்கள் நல்ல வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு செய்கிறோம். ஒரே தடவை எம்மை பரீக்ஷை பாருங்கள்.

ஸூராஜ் மல் லல்லுபாய் அண்டு கோ.,

கீர்த்தி பெற்ற வைர வியாபாரிகள்.

3 எஸ்பிளனேட் : : : : மதறாஸ்.

கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபி விருத்தியையும், பாஷாபி மானத்தையும் கருதியுழைக்கும் தேசிய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே! இப்பத்திரிகையில் அரிய வியாசங்கள், இனிய நாவல்கள், நவீன நாடகங்கள், நீதி நூல்கள், செவிக்கினிய செய்யுட்கள், விடுகதைகள், விநோதக்கூற்றுகள், உலக வர்த்தமானங்கள் பிறபாஷைகளில் உள்ள அரிய விஷயங்களின் மொழிபெயர்ப்பு முதலியன இனிய எளிய தமிழில் வெளியாகும். ஒவ்வொரு ஆடவரும், பெண்டிரும், சிறுவரும், சிறுமியரும் சந்தா தாரராகச் சேருங்கள்! கலைமகளைப் படித்து கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்குங்கள்!

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12. பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1.

தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,

64. முல்லாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.

இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள். முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

விதியை மதியால் வெல்லல் ஓர்கதை

(ம-ா-ா-ஸ்ரீ தி. வி. சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதியது)

வடஇந்தியாவில் காஸ்மீர தேசத்தில் பராக்கிரம சிம்மன் என்று ஓரரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு நெடுநாள் வரையிலும் குழந்தைகளே பிறக்காமலிருந்து பிறகு ஸீமனோரமா வென்கிற ஒருவெகு அழகிய பெண்பிறந்தாள். இப்பெண் நாளளவில் அதிரூபசுந்தரியாகவும் உத்தம குணங்களையுடையவளாகவும் வளர்ந்து வந்தாள் அவளுக்கு விவாகபர்வம் கிட்டிற்று. அரசன் பராக்கிரமசிம்மனுக்கு வீரபாகுவென்று ஒருஸேனாதிபதியிருந்தான். அவனுக்கு யெத்பவிஷியன் என்கிற ஓரேகுமாரன் இருந்தான். வீரபாகுவானவன் ஸீமனோரமாவைத்தன் குமாரனாகிய யெத்பவிஷியனுக்கு விவாகம்செய்து அவனைப்பராக்கிரம சிம்மனுக்குப்பின்பு அரசனாக்கவேண்டுமென்று நோக்கங்கொண்டான். ஒருநாள் ஜோசியர்களை அரசனின் முன்னிலையில் வரவழைத்து ஸீமனோரமா யெத்பவிஷியனுக்குத்தான் மனைவியாக வேண்டுமே யொழிய வேறொருவருக்கும் அவன்மனைவியாக முடியாதென்கிறபடி ஜாதகங்களைப்பார்ப்பதுபோல் பார்த்துச்சொல்லும்படி அவர்களை ஏவினான். ஜோஸியர்கள் அப்படியே நடந்துகொண்டு ஸீமனோரமாவின் ஜாதகம் யெத்பவிஷியனின் ஜாதகத்துடன்தான் ஒத்திருக்கிறதென்றும் வேறு எவரின் ஜாதகத்துடனும் அது ஒத்துவராதென்றும் ஆகவே ஸீமனோரமா யத்பவிஷியனைத்தான் மணம்புரியவேண்டு மென்றும் மொழிந்தார்கள். அரசனும்மதிமயங்கி வீரபாகுவின் சூழ்ச்சிக்கிணங்கி தன்னுடைய குமாரியை யெத்ப்விஷியனுக்கே விவாகம்செய்யத் தீர்மானித்து, எல்லாஏற்படுகளையும் செய்து, மூகூர்த்தத்தை நடத்தத்தொடங்கினான். யத்பவிஷ்யனை நன்றுயலங்காரித்து விவாகமண்டபத்திற்கு அழைத்து வரும்படி அரசன் வீரபாகுவிற்குக்குக்கட்டளையிட்டான். தன்குமாரனைக்கூட்பிட்டு அரசனுடைய அபீஷ்டத்தைக்கூறின பொழுது யெத்பவிஷியன் குரங்கைத்தோளின்மீது வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தான். அவனோ சுவபாவத்திலேயே ஒரு அசடன், விகாரமான பித்தம்பிடித்தவன். தகப்பன் இவ்விதமான சந்தோஷவார்த்தையைச்சொன்னால் இதரபிள்ளைகள் எவ்வளவோ குதூஹலத்தையடைந்து முன்னுக்குச் செல்லத்தயாராக விருப்பார்கள். யெத்பவிஷியனோ தன் தகப்பன் கொண்டு வந்தசெய்தியில் கொஞ்சமேனும் ருசியைவஙிக்காமலும், காதுகொடாமலும் குரங்கோடேயேவிளையாடி

க்கொண்டுமிருந்தான். ஆயினும்வீரபாகுவும், அவனுடைய மனைவியாரும் வெகுபிரயாசையுடன் யெத்பவிஷயனை யலங்கரித்து விவாஹ மண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அரசன் தன் குமாரியாகிய ஸ்ரீமனோரமாவைக்கூப்பிட்டு யத்பவிஷயனுக்குஅவளை விவாஹம்செய்து கொடுக்கப் போகிறதாகச் சொன்னான். அதைக் கேட்ட ஸ்ரீமனோரமா தான் கலியாண விஷயமாய்க்கொண்டுள்ள பிரதிக்ஞையைவெளியிட்டாள். அதாவது, யாரொருவன்அலகாபுரிக்குச்சென்று அங்குள்ள வர்த்தமானங்களை அறிந்துவந்து சொல்வானோ அவனையேதான் மணம்புரியப்போகிறதாகச் சொன்னாள். அரசனும் ஸேனாபதியும் வெகுதூரம் அவளுடையமனதைத் திருப்பப்பார்த்தார்கள். ஸ்ரீமனோரமா வானவள் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவில்லை. மேலும், அந்தத்தீர்மானத்தின்படிதான் நடந்துகொள்ளாவிட்டால் தன்னுடைய உயிருக்கே அபாயம் வருமென்றும் அவள் உரைத்தாள். அதைக்கேட்ட அரசன் விவாஹநடவடிக்கைகளை நிறுத்திவிட்டு பலதேச அரசர்களை வரவழைத்துச் சபைகூட்டி ஸ்ரீமனோரமாவின் தீர்மானத்தைச் சொல்லி அவர்களை அலகாபுரிக்குச்செல்லும்படி தூண்டினான். வந்திருந்த அரசர்களில் ஒருவரும் அலகாபுரிக்குச் செல்லத்துணியவில்லை. அலகாபுரிக்குச் செல்லும் வழியில் அநேக பேய்ப்பிசாசுகளும் பூதங்களும் சஞ்சரிக்கின்றனவென்றும், அநேக ராக்ஷஸர்களும் அங்கு வஸிக்கிறார்கள் என்றும் மேலும் இன்னும்பலவித அபாயங்கள் அலகாபுரிக்குச் செல்வதிலிருக்கின்றனவென்றும் கூறிய அவர்கள் அரசனின் மொழிக்கிணங்கவில்லை.

இந்தசந்தர்ப்பத்தில் ஸ்ரீநகரியில் வஸித்த சிதா என்கிற ஒரு ஏழைப்பிராம்மண விதவைக்கு பிரமாத்என்கிற புத்திரன் ஒருவன் இருந்தான். சிதாவானவள் கைராட்டினஞ் சுற்றி நூல் நூற்று ஜீவனஞ்செய்துவந்தாள். பிரமாத்வயதுவந்தவனாக விருந்தபோதிலும் எப்பொழுதும் சோம்பலுடனும், முயர்ச்சியில்லாமலும் ஜீவனோபாயமொன்றையும் பின்பற்றாமலும் தாயின் ஸம்ரக்ஷணையிலேயே இருந்துவந்தான். காலையில் சூரியனுதித்த பிறகு வெகுநேரம் வரையில் படுத்துக்கொண்டும் தாய் எங்கேயாவது ஜீவனோபாயத்தை யனுஸ யென்றால் அவளுடைய சொல்லுக்கிணங்காமலும், நடந்துவந்தான் எப்பொழுதும், விதியின்படி தான் அவர்அவர்களுக்கு ஸம்பத்து கஷ்டமும் ஏற்படுமென்றும் மனிதர்களிற்கு ஐசுவரியம்அதிருஷ்ட

சத்தினால் தான் உண்டாகிறதென்றும், அவர்களின் முயர்ச்சிகளால் அது உண்டாகிறதில்லையென்றும் சொல்லிக்கொண்டு அடிக்கடி உறங்கிக்கொண்டிருந்தான். நாள்தவராமல் தாயானவள் மகனுக்குப் போதனைகளைச் சொல்லிவந்தும் பிரமாத் தன் வழியே நடந்துகொண்டான்.

இப்படியிருக்கையில் தேவலோகத்தில் பிர்ம்மாவிற்கும் ஸரஸ்வதிக்கும் விதி பெரிதா மதிபெரிதாவென்கிற விஷயத்தில் விவாதமேற்பட்டது. விதியை மனிதர்கள் மதியால்வெல்லமுடியாதென்று பிரம்மாவானவர் கூறினார். ஸரஸ்வதியானவள் மதிதான் பெரிது என்றும், மனிதர்கள் மதியினால் விதியைமாற்றிக் கொள்ளலாமென்றும் மொழிந்தாள். இவ்விதமாக வாதம் நடந்து கொண்டிருக்கையில் பிரம்மாவானவர் பிரமத் என்பவனின் நடவடிக்கைகளை உதாரணமாக எடுத்து நிரூபிக்கத்தொடங்கினார். ஸரஸ்வதி யானவள் ஆக்கிரஹங்கொண்டு ஒரு புரோஹிதப்பிராமணனைப்போல் வேஷம் பூண்டு சிதாவின் வீட்டிற்குச் சென்று அரசனுடைய அரண்மனையில் இராஜகுமாரியின் விவாஹம் அன்றுதான் நிர்ணயமாகிறதென்றும் அதன் நிமித்தமாக விசேஷமாக பூரிதக்ஷிணைகள் பிராம்மணர்களுக்குக் கொடுக்கப்படுமென்றும், பிராம்மணபோஜனம் வெகு நன்றாக நடைபெறுமென்றும் பிரமாத் அவ்விடம் சென்றால் அவனுக்கும் நல்லதக்ஷிணையும் சாப்பாடும் கிடைக்குமென்றும் சிதாவிடன் சொன்னாள். சிதாவும், மாறுவேஷம் பூண்ட ஸரஸ்வதியும் எவ்வளவு தூரம் சொன்னபோதிலும் பிரமாத் அவர்களின் சொல்லிற்கிணங்கவேயில்லை; கடைசியில் பிரமாத் செவிகொடுக்கத்தொடங்கினான். அவன் அரண்மனைக்குப்போகஎத்தனஞ்செய்தான், போவதற்குப்பலதடவை எழுந்திருந்து உட்கார்ந்தான். தாய்பலாத்காரமாய் அவனைத்தள்ளிப் போகச்சொன்னாள். கொஞ்சம் தூரம் போய்க் காலில் முண்தைத்ததென்றும், கால் நொந்ததென்றும் பலவித ஸால்ஜாபுகளைச்சொல்லி அரண்மனைக்குச் செல்வதில் ஆலஸியஞ் செய்தான். பிரம்மாவானவர் இவன்செயல்களை ஸரஸ்வதிக்கு நிரூபித்து விதியை யொருக்காலும் ஒருவரும் வெல்லமுடியாதென்று கூறினார். இதைப்பார்த்து ஸரஸ்வதிதேவி புரோஹிதபிராமண வேஷம் பூண்டு மறுபடியும் பிரமாதினிடத்தில் சென்று அவனை அரண்மனைக்குக் கொண்டுபோய்விட்டாள். பிரமாத் அங்கேபோனதும் அநேகப்பிராம்மணர்கள் ஒருவர்மேல் ஒருவர்மோதிக்கொண்டு

தக்ஷிணைகளையும், ரொட்டி பால் முதலியவைகளையும் அடைவதைப் பார்த்துக்கொண்டு கூட்டங்கலையட்டு மென்று சொல்லிக்கொண்டு தான் அவைகளை வாங்கிக்கொள்ள முன்னுக்கு போகாமலே இருந்து விட்டான். எல்லாப்பிராம்மணர்களுக்கும் பூரிகளும், ரொட்டிமுதலியவைகளும் கொடுப்பது முடிந்தது. அரண்மனை அதிகாரிகள் எல்லோரையும் போகும்படி உத்திரவிட்டார்கள். பிரமாத் இப்பொழுது அவர்களை நோக்கித்தனக்கு ஒன்றும்கிடைக்கவில்லை யென்று சொன்னான். அவனுடைய ஆலஸியத்தைக்கண்டு ஆச்சரியப்பட்ட அதிகாரிகள் மீந்தரொட்டி துண்டுகளையும் பாலையும் அவனுக்குக் கொடுத்தார்கள். அவைகளை வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பி வருகையில் வழியிலிருந்த ஆட்டுக்கிடா வொன்றுஅவனை முட்டிற்று. பால் கொட்டிப்போய்விட்டது, ரொட்டியும் தரையில் சிதரிவிழுந்தது இவைகளை ஆடு கொஞ்சம் சாப்பிட்டது. மீந்தபாலையும் ரொட்டித்துண்டுகளையும் அள்ளிக்கொண்டு பிரமாத் தன் வீட்டிற்குச் செல்லும் பொழுது வழியில் ஒருகாக்கை அவைகளைக்கவ்விக்கொண்டுபோய் விட்டது. ஆகவே, பிரமாத் வெறுமையுடன் வீட்டிற்குச் செல்லவேண்டியதாக நேரிட்டது. வீட்டிற்குப்பிரமாத் சென்றதும் அவனுடைய தாய் அவனைவெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். அவன் கையில் ஒன்றுமில்லாமல் வந்ததும் அவன் மிகத்துயரங்கொண்டான். இந்தஸந்தர்ப்பத்தில் பிரம்மதேவன் ஸரஸ்வதிக்கு இந்தநடவடிக்கைகளை நிரூபித்து விதியின் உயர்வைவிளக்கினார்.

இச்சமயத்தில் அரண்மனையில் ஸீமனோரமாவின் விவாஹ ஏற்பாடுகள் கைகொள்ளப்பட்டன. வந்திருந்த அரசர்களில் ஒருவரும் அலகாபுரிக்குச் செல்லத்துணியாததால் யத்பவிஷ்யனேயே அவளுக்கு விவாஹஞ்செய்யவேண்டுமென்று வீரபாகு அரசனுக்கு வற்புறுத்தினான். அரசன் ஸீமனோரமாவின் மனோரதத்திற்கு எதிரிடையாக விருக்க இஷ்டமில்லாமல் அலகாபுரிக்குச் செல்லக்கூடிய யாராவது அகப்பட மாட்டார்களா வென்று மனதில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். பராக்கிரம சிம்மன் யத்பவிஷ்யனுக்கு ஸீமனோரமாவை விவாஹஞ் செய்து கொடுக்க ஒப்புக்கொள்ளாமல் இருப்பதைக்கண்டு வீரபாகு அரசனின் பேரில் கலகத்தை யேற்படுத்தி அவனைச்சிறையில் அடைத்து விட்டு விவாஹத்தை நடத்தமுயன்றான். இப்படியிருக்கையில் புரோஹிதப்பிராம்மண வேடம் கொண்ட வாணியானவள் பிரமாதிற்கு நல்புத்தியுண்டாக்க அவனை அரண்மனைக்குள்

செல்லும்படியும் சிறையிலிருக்கிற அரசனை விடுவிக்கும்படியும் ஸேனாபதிமுதலிய கலகக்காரர்களை யடக்கும்படியும் அலகாபுரிக்குச் சென்று வந்து இராஜபுத்திரியை விவாஹஞ்செய்து கொள்ளும்படியும் தூண்டினான். பிரம்மதேவர் தன்மனைவியாரைப்பார்த்து விதியின்படிதான் பிரமாத் நடப்பானென்பதையும் அவன் வேறுவிதமாக நடக்கமுடியாதென்பதையும் நேரிடவே அவன் பார்த்திருக்கிறானென்பதை அவளுக்குதான் நிரூபித்திருப்பதை எடுத்துச்சொன்னார் ஸரஸ்வதிதேவியார் அதற்குப்பதிலளிக்கையில மனிதர்களின் மதியானது பலதோல்விகளால் தான் அபிவிருத்தியாகிறதென்றும் பிரமாத் துடப அநுபவத்தினால் நல்புத்தியை யடைந்திருக்க வேண்டுமென்றும், அவன்தான் உபதேசித்தபடி நடக்கப்போகிறானென்றும் கூறினாள் பிரமாதும் பழய ஆலசியத்தையும் அவிவேகத்தையும் விட்டுவிட்டவனாய் ஸரஸ்வதி தேவியின் உபதேசத்தைப்பின்பற்றி அரண்மனைக்குவெகு விரைவாகச் சென்றான். அரண்மனைவாயிலை அடைந்தும் காவலாளிகள் அவனை உள்ளே பிரவேசிக்க விடவில்லை. ஆனபோதிலும் அவன் ஒருவரும் அறியாதபடி அரண்மனைக்குள்ச் சென்று அரசனைச்சிறையிலிருந்து விடுவித்து அரசனிடத்தில் தான் அலகாபுரிக்குப் போகத்தயாராக விருப்பதைச் சொன்னான். அரசன் அவனுடைய மொழியைக்கேட்டுச்சந்தோஷமடைந்தான். ஸீமனோரமாவின் கவலையும் நீங்கிற்று. அவளும் உற்சாகத்தையடைந்து பிரமாதைவெகு பிரீதியுடன் பார்த்தாள். அரசன் பிரமாதிற்கு சம்மதத்தைக் கொடுத்து அவனை ஆசிர்வதித்து அலகாபுரிக்குச் செல்லும்படி உத்திரவிட்டான். பிரமாத் பிரயாணப்பட்டான். அவன்புறப்படும் பொழுது ஸீமனோரமா அவனைக்கூப்பிட்டு அவனுக்கு வேண்டிய தைரியத்தைச் சொல்லி, அவன் அலகாபுரிக்குப் போய் செய்திகளைத்தெரிந்துவந்தால் அவனையே அவள் கல்யாணஞ் செய்து கொள்ளப்போகிறதாகவும் அவனுக்குச் சொன்னாள்.

பிரமாத் அலகாபுரியை நோக்கிச்செல்கிறான். அவன் செல்லும் பொழுது சினங்கொண்ட ஸேனாபதியானவன் தன்னுடைய படர்களோடு எதிர்வந்து அவனைத்தாக்கிக் கொல்ல எத்தனித்தான். பிரமாத்தப்பித்துக்கொண்டு ஒருமரத்தின் கிளைமேலேறிஉட்கார்ந்தான். மரத்தின் மேலும் எதிரிகள் ஏறத்தொடங்கவே அவன் மரத்தின் அருகிலிருந்த ஓர்நதியில் குதித்துவிட்டு எதிர்கரையில் ஏறினான் எதிர்க்கரையையும் எதிரிகள் அடைந்து பிரமாத்தைத்தேடினார்கள்;

எதிரிகள் தன்னைப்பின் தொடருவதைக்கண்ட பிரமாத் வழியில் ஒருகிணற்றில் தோட்டக்காரர்கள் கவலை யடிப்பதைப் பார்த்தான். அவர்களிடத்தில் தனக்கு வந்திருக்கிற ஆபத்தை அவன் தெரிவித்துக்கொண்டான். கவலையடிக்கும் தோட்டக்காரர்கள் அவனை கவலையில் உட்காரவைத்து கிணற்றுக்குள் ஒளித்துவைத்தார்கள். எதிரிகள் பிரமாத்தைக்கண்டு பிடிக்கமுடியவில்லை. ஆகவே அவர்கள் தங்களுடையவூருக்கே திரும்பிசென்றனர் அவ்வழியே அந்தபிரதேசத்து காட்டு ஜனங்களின் அதிபதியானவன் பரிஜனங்களோடு போனான். போகும் பொழுது கிணற்றில் பிரமாதைக்கண்டு அவனைக்கிணற்று தேவதையென்று எண்ணி அவனைநோக்கிப்பிரார்த்தித்துக் கொண்டான். பிரமாத் அவனுடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்வதாக வாக்குதத்தம்செய்து தன்னைக் கிணற்றின் கரைக்குத்தூக்கி விடவேண்டுமென்று அவனைக்கேட்டுக்கொண்டான் அதிபதியும் பரிஜனங்களும் அப்படியே செய்தார்கள். குமாரிக்குப் பேய்பிடித்திருந்தது. அவளை பேயினின்று விடுவிக்கவேண்டுமென்று நீதிபதி பிரமாதை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டான். ஒருநாள் இரவில்போல்லரும் ஸமயத்தில் பிரமாத் பேயைக்கொல்ல வேண்டும் மென்று தீர்மானித்து பேயின் வரவைஎதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நீதிபதியின் குமாரி வயிற்றில் அதிகநோயுடனிருந்து வருத்தப்படுவதை நீதிபதியும் அவனுடையஜனங்கள் பேயின் செய்கையென்று நம்பியிருந்தார்கள். இராஜகுமாரியின் வயற்றிலிருந்து ஒருபாம்பு வெளியே வந்ததை பிரமாத் கண்டான். அதைப்அவன் கொன்றான். பின்பு இராஜகுமாரிக்கு யாதொருநோயும் வரவில்லை. நோய் பேயின் செய்கையன்று என்பது பின்புவிளங்கிற்று நீதிபதியானவன் பிரமாத்தினிடத்தில் திருப்தியையடைந்து அவனுக்குத்தன் குமாரியை விவாஹம் செய்துவைத்து அவனுக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்ய ஒப்புக்கொண்டான். பிரமாத் அப்பிரதேசத்தைவிட்டு அவ்வதிபதியின் ஒத்தாசையால் அலகாபுரியை யடைந்தான் அலகாபுரியின் அரண்மனைக்குள்ச் சென்றவுடன் கனககாந்தா வென்கிற அலகாபுரியின் தேவதை அவனுக்குமரியாதைகளைச் செய்து அவனை மணங்கொண்டாள் கனககாந்தா வென்பவள் இணையில்லாத அழகிய தேவஸ்திரி, இந்திரனுக்கு அதிகபிரயமானவள். அவள் இந்திரனின் சபையையடைந்தாள். பிரமாத் அலகாபுரிக்கு அரசனானான்.

பின்ட பிரமாத் கனககாந்தாவுடனும் காட்டு அதிபதியின்

ரியுடனும் காஸ்மீரத்திற்குத்திரும்பி வந்தான். தேவர்களுடைய
ர்வாதங்களினால் அவன் அதிகவல்லமை யுடையவனாகவும்தேஜஸ்
ாகவும் விளங்கினான். ஸ்ரீநகரை யடைந்து அரண்மனைக்குள்
ண்மேனைவியாருடனும் சென்றான். பராக்கிரமசிம்மன் பிரமாத்
ம்பிவராமலிருப்பதைப்பற்றி வெகுதுயரப்பட்டுக் கொண்டிருந்
ர். பிரமாத்வெகு சிறப்புடனும், தேவஸ்திரி மனைவியாருடனும்
வதைக்கண்டு ஆனந்தப்பட்டு ஸீமனோரமாவிற்குத்தெரிவித்தான்
மனோரமாவின் சந்தோஷம் எல்லைகாணவில்லை. உடனே பிரமாத்திற்
ஸீமனோரமாவிற்கும் விவாகம்நடந்தது பிரமாதின்தாயைப்பிள்ளை
றமல் விசனமடைந்திருந்தாள். பிரமாதின்தாய் விருத்தாந்தத்
த்தெரிந்து கொண்டு வெகு சந்தோஷத்தை யடைந்தவளாய் அவ
னும், அவனுடைய பாரிகைகளுடனும் அலகாபுரிக்குச்சென்
, எல்லோரும் வெகு சிறப்பாய் வெகுகாலம் வாழ்ந்தார்கள்.

பொதுவிஷயக்குறிப்பு

இராஜப்பிரதிநிதி யவர்களால் உண்டாக்கப்பட்ட மாக்ஷிமைதங்கிய
ரவர்த்தி அவர்களின் "தேசசொஸ்தக் கடவுள் வாழ்த்துநிதி"
ாது கிராம ஜனங்களின் ஆரோக்கிய விஷயத்திற்குச் சிலவிடப்
மோம். ஆகவே கிராமஜனங்கள் அனைவரும் தங்களால் கூடிய
ரயில் இந்நிதிக்கு பணங்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
ம். மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தி அவர்கள்நம்முடைய
ச கிராமஜனங்களால் கொண்டாடப்பட்டவராகையால் கிராமத்
ர்கள் அனைவரும் ஒருபைமுதல் அவர்அவர்களால் எவ்வளவு
வியத்தைக் கொடுக்கக்கூடுமோ அதைக்கொடுக்கவேண்டுமென்று
றலோம். பாரெஸ்டு பஞ்சாயத்தார்களும்தங்களுடைய மாஹாண
ாபனத்தின் மூலமாகப்பணத்தைக் கொடுக்க வேண்டுமென்றும்
ோவோம்.

x x x x x x

விவஸாயத்தை நம்முடைய மாஹாணத்தில் உயர்த்திஅபிவிரு
செய்து கீர்த்திபெற்று உத்தியோகத்திலிருந்து நீங்கப்போகிற
வஸாய இலாகா தலைவரான மிஸ்டர் அன்ஸ்டட் அவர்களுக்கு
முடைய வந்தனங்களைச் செலுத்துகிறோம். நம்துபத்திரிகையை
ரித்து அதில்பல உயர்வான கட்டுரைகளை அவர் எழுதியிருக்கி
. அவர்பல்லாண்டு பல்லாண்டாக வாழ்வாராக.

x x x x x x

கிராமப்பள்ளிக்கூடங்களினால் கிராம அபிவிருத்தி முயர்ச்சிகள்
ாய் நடத்தப்படவேண்டுமானால் கிராமபள்ளிக்[illegible]

199387

யானஸ்தலங்களில் அமைக்கப்படவேண்டும். அவைகளுக்குச்சரியான கட்டிடங்களும் அமையவேண்டும். போதனைகளை நடத்தும் உபாத்தியாயர்கள் திறமையுள்ளவர்களாகவும், கிராமஅபிவிருத்தி விஷயங்களில் ருசியை உடையவர்களாகவும், கிராமபள்ளிக்கூடபோதனைகளில் சிரத்தையைவஹிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். கிராமப்பள்ளிக்கூடங்கள் அவைகளில் போதனைகாலமானபிறகு, கிராம ஜனங்கள் கூடிக்கலந்து பேசிக்கொள்வதற்காகவும், விச்ராந்தி நிமித்தமாகவும் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்காகவும், கிராமப்பஞ்சாயத்துகளின் மீடிங்குகள் நடத்துவதற்காகவும். இராமாயண மஹாபாரத உபந்நியாஸங்களை நடத்துவதற்க்காகவும் உபயோகப்படவேண்டும். கல்விஇலாகாவானது இவ்வித முயற்சிகள் கிராமப்பள்ளிக்கூடங்களில் நடைபெறும்படிச்செய்யவேண்டும். ரெவினியூ முதலிய இலாகாக்களின் உத்தியோகஸ்தர்கள் இப்பள்ளிக்கூடங்களை அடிக்கடிப்போய்பார்த்து மாணவர்களையும்உபாத்தியாயர்களையும் பள்ளிக்கூட ஸ்தலங்களை ஒழுங்குபண்ணி நேர்த்தியாகவைக்கும்படி போதிக்கவேண்டும்.

X X X X X X

ஜெக்கோஸ்லோவாகியா தேசத்தில் ஜனங்களுக்கு செய்திகளைத் தெரிவிப்பதற்காக கம்பியில்லாதந்தி கருவிகள் வேலை செய்கின்றனவாம். இரண்டுலக்ஷம் ரிஸீவிங்கு செட்டுகள் அவ்வூரில் இருக்கின்றனவாம். அவைகள் தினந்தோறும் சீதோஷ்ண ஸ்திதியில் வரக்கூடிய மாறுதல்களைப்பற்றியும், தான்யங்களின் விலைவாசிகளைப்பற்றியும் ஆடுமாடு விலைவிவரங்களைப் பற்றியும் செய்திகளைத்தெரிவிக்கின்றனவாம். வாரத்திற்கு இரண்டுவிசை அந்நியநாட்டு நாணயசிலாமணி விவரங்களையும், வியாபார விஷயங்களையும் தெரிவிக்கின்றனவாம். ஞாயற்றுக்கிழமைகளில் வெளிநாட்டு வர்த்தமானங்களையும், வெளிநாடுகளில் வியவஸாய முறைகளிலும் தொழில் முன்னேற்றவழிகளிலும் நிபுணர்களால் செய்யப்படும் உபந்நியாஸங்களையும் தெரிவிக்கின்றனவாம். படித்தவர், படிக்காதவர், சிறுவர், பெரியவர் யாவருக்கும் உபயோகமான விஷயங்களில் செய்திகள் இவ்வொயர்லெஸ் ஸெட்டுகளின் மூலமாய் வருகின்றனவாம். நம்முடையதேசத்திய வியவஸாய இலாகாவும் வொயர்லெஸ் சௌகரியங்களை இத்தன்மையாகவே கிராம அபிவிருத்தி முயர்ச்சிகளில் உண்டாக்கவேண்டுமென்று கோருகிறோம்.

X X X X X X

கோயம்புத்தூர் கரும்பு ஸ்தாபனத்தின் உதவிநிபுணராகியமிஸ்டர் கே. கிருஷ்ணராவ் அவர்கள் வைஸ்ஸா காற்றொலியில் கரும்பு சாகுபடியைப்பற்று ஒருருசிகா[illegible]ஸத்தைவசித்தார். கரும்பு ஒருஉஷ்ணதேசப்பயி

றென்றும், எந்தெந்தப் பிரதேசத்தில் உஷ்ணமும் மழையும் அதிகமாயிருக்கின்றனவோ, அப்பிரதேசங்களிலெல்லாம் அது நன்றாய் வளர்றதென்றும், வளருகிறகாலத்தில் அதற்குச்சூரியவெளிச்சம் அதிகமாய் வேண்டுமென்றும், முத்துகிறகாலத்தில் அதற்குக் குளிர்ச்சிவேண்டுமென்றும் அவர் கூறுகிறார். மழைபோதமல்போனால் நீர்பாய்ச்சுவதே கரும்புப்பயிருக்குப்போதாதாம். போதுமான அளவில் மழைபெய்யவேண்டியது அவசியமாம். மழையினால் தண்டும் இலையும் அலம்பப்படுவதாலேயே வெகுநன்மைகள் அப்பயிருக்கு ஏற்படுகின்றனவாம். மழையினால் பயிரின்மேல் ஏற்பட்டிருக்கும் பூச்சிமுட்டைகளும் ஒழிக்கப்படுகின்றனவாம். ஆகாயத்திலிருந்து நைட்ரோஜன் ஆவிமழைத்துளிகளின் மூலமாய் கரும்புச்செடிகளையடைகின்றவாம்.

X X X X X

மாங்காய்கள சீக்கிரம் அழுகிப்போகிறபடியால் வியாபாரிகள் மாங்காய்களைமரத்திலிருந்து இறக்கின உடனேயே எப்படியாவது விற்றுவிடுகிறார்கள். மார்கெட்டுகளில் மாங்காய்கள் அதிகமாக நிறம்பிப்போவதால் மாங்காய்க்காரர்கள் காய்களை குறைந்தவிலைகளுக்கு விற்கிறார்கள். மரங்களிலிருந்து இறக்கியபின்புகாய்கள் ஒருமாதம், அல்லது 6வாரங்கள்வரையில் அழுகாமல் வைக்கப்படக்கூடுமானால் அவைகளை உடனே விறகவேண்டியதாக ஏற்படாது. இந்தியவியவஸாயப்பத்திரிகையில் மிஸ்டர் வி. எஸ். இராம ஐயர் அவர்களும் மிஸ்டர் என். வி. ஜோஷிஅவர்களும் இதுவிஷயமாக எழுதுகையில் பழுத்த மாம்பழங்களும் செங்காய்களும் குளிர்ச்சியில் வைக்கப்பட்டால் —அதாவது சூடு 10 டிகிரியிக்கு மேல்பட—அவைகள் மூன்று நான்கு வாரங்கள் பரியந்தம் அழுகாமலிருக்குமென்றும் காய்கள் மரத்திலிருந்து நன்றாய் முற்றினபின்பு இறக்கப்பட்டு ஒருஅறையில் போட்டால் அவைகள் அவ்வறையின் உஷ்ணத்தினாலேயே 3தினங்களில்பழுத்துவிடுமென்றும் அதன்பிறகு அவைகள்மேலே கூறியபடி குளிர்ச்சியில் வைக்கப்பட்டால் 2 வாரங்கள் வரையில்கெடாமலிருக்குமென்றும் பழங்களும் வெகு நன்றாயிருக்குமென்றும் பழங்களை அடிக்கடி அமுக்கிப்பார்க்கவேகூடாதென்றும் ஒவ்வொருபழத்தையும் மெல்லிதான காகிதத்தினால் சுற்றி வைக்கோலில்வைப்பதும் நல்லதென்றும் கூறுகிறார்கள்.

X X X X X

வங்காளத்தில் பரித்பூரில் வியவஸாயி வகுப்புப்பிள்ளைகளை வியவஸாய முயர்ச்சிகளில் பயிர்ச்சிசெய்வதற்காக ஒருபள்ளிக்கூடமேற்படுத்தப்பட்டது. பிள்ளைகள் ஒருவருஷகாலம்பயிர்ச்சிசெய்யப்படுகிறார்கள். வியவஸாயவிஷயங்களிலும் வியவஸாயத்தச்சு வேலையிலும் மாட்டு வைத்தியவிஷயங்களிலும் கூட்டுறவு விஷயங்களிலும் போதனைகளை அவர்கள் அடைகிறார்கள். பயிர்ச்சிகாலத்தில் அவர்கள் கவர்மெண்டு வியவஸாயப்பண்ணையில் மாதம் ஒன்றுக்கு 12ரூபாய் விகிதம் சம்பளத்தை வாங்கிக்கொண்டு கூலியர்களாக உழைத்து வருகிறார்கள். அவர்களுக்கு இலவசமாக வாஸஸ்தலம் மாத்திரம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் சாப்பாட்டு விஷயத்தைத்தாங்களே ஏற்பாடுசெய்துகொள்ளவேண்டும். ஒரு வருஷமானபிறகு ஒவ்வொரு பிள்ளைக்கும் 15 பிகாநிலம் வரியில்லாமல் மூன்றுவருஷத்திற்குக் கொடுக்கப்படுமாம் அவர் அவர்களே அந்நிலத்தைச் சாகுபடி செய்யவேண்டுமாம். அவர்கள் அதில்வேறொருவருக்கும் பாகத்தைக் கொடுக்கக்கூடாதாம். அதை அவர்கள் குத்தகைக்கும் விடக்கூடாதாம். கவர்மெண்டார் ஒவ்வொருவருக்கும் 200 ரூபாயை பயிர் செலவிற்கு முன்பணமாக கொடுக்கிறார்களாம். அட்வான்ஸானது வருஷத்திற்கு ஒருதவணையாக 4 தவணைகளில் வசூலிக்கப்படுமாம். மூன்று வருஷகாலத்திற்குப் பின்பு திருப்தியாகவேலை செய்தவர்களுக்கு நிலங்கள் பட்டாவின்பேரில் கொடுக்கப்படுமாம். முதல்வருஷத்தில் பயிர்செய்யப்பட்ட பிள்ளைகளைபற்றி ஸர். பி. ஸீ. ராய் அவர்கள்மாடர்ன்ரிவியூ பத்திரிகையில் வெகுஉயர்வாக எழுதுகிறார். நம்முடைமாஹாணகவர்மெண்டும் வங்காளத்தைப் போல் இவ்விதமான முயர்ச்சிகளைக்கைக்கொண்டால் நம்முடைய மாஹாணத்தில் ஜீவனோபாயமில்லாத சிருவர்களுக்குத் தொழிலேற்படுவதுடன் நம்முடைய மாஹாணத்தில் வியவஸாயமும் வெகுவிரைவில் முன்னேற்றத்தையடையும்.

x x x x x

பாலின் ருசியும் அளவும் பசுஎந்தத்தீனியைத்தின்கின்றதோ அதைப்பொருத்திருக்கிறது, பாலில் நாற்றமேற்படுகிறதும்தீனியினால்தான். மாட்டின்உடம்பின் தாருட்டியமும், மாடு ருசியான தீனிகளைத் தின்பதும் பாலின்ருசிக்கும், அளவிற்கும் காரணங்கள். பால் ருசியாயிருக்கவேண்டுமானால் பசுக்களுக்கு பாலை கறந்தபின்பு நல்லருசியுள்ள தீனிகளைக்கொடுக்கவேண்டும். பாலைக்கறப்பதற்கு முன்னே இவ்வித

தீனிகளைக் கொடுப்பதால் பயனில்லை. மாடுகளில் பாலுண்டானபின் ஏற்படும் நாற்றங்களும், பாலிலுள்ள கிருமிகளுக்கு ஏர்படும் மாறுபாடுகளும் பாலின் நாற்றத்திற்குக் காரணங்கள். பாலானது கறக்கப்பட்டபின்பு காற்றுடவைக்கப்பட்டு சூடாரினால் தீனிவஸ்துக்களால் ஏர்படக்கூடிய நாற்றம் போய்விடும். ஆகையால் பசுக்களை வைத்துக்கொண்டு பால்வியாபாரத்தைச் செய்யப்பட்டவர்கள் மாடுகளுக்கு தீனியைக்கொடுக்கும் விஷயத்தில் ஏதாவது நாற்றமேர்ப்படக்கூடிய தீனியை போட வேண்டியதாயிருந்தால் அவ்விதத் தீனியை மாடுகள் கறக்கப்பட்டபிறகுதான் அவர்கள் போட வேண்டும். மாட்டுதொட்டில்கள் சுத்தமாக வைக்கப்பட வேண்டும். கறந்தபாலைக்காற்றில்வைத்து ஆறவைக்கவேண்டும். பாலைக்குளிர்ந்த ஸ்திதியில் வைத்தால் நாற்றம் ஏற்படாது.

மதிப்புரை

"போதுநலம்"

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், கும்பகோணம்.

இது ஸ்ரீமான். எஸ். வி ஆர். பீ. கே. ஆர். கோபாலர் அவர்களால் நடத்தப்படுகிறது. தேசோத்தாரணத்திற்காகப் பாடுபடுகிறது. ஆசிரியர்களால் கூட்டுறவு, சுகாதாரம், வியவஸாயம் முதலியவிஷயங்களில் இனிய தமிழில் கட்டுறைகளையடங்கியது. இப்பத்திரிகைக்கு நாம் நன்கு வரவையளிக்கிறோம்.

"பாரதி"

மாலை 1 : மணி 6-7.

உத்தமபாளையத்தில் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி அவர்களால் நடத்தப்படுகிற இப்பத்திரிகை தேசிய விஷயங்களில் சிறந்த கட்டுறைகளை அடங்கியது. தலைப்பில் கூறப்பட்ட சஞ்சிகை நமக்குக் கிடைத்திருக்கிறது. அதில் இங்கிலாந்தில் தொழிற்கல்வி," "பர்மாவில் வாழும் தமிழ்மக்கள்," ஹரி கோவிந்த கோவில்" என்கிற கட்டுறைகள் வெகு ருசிகரமாகவிருக்கின்றன.

"ஸ்ரீராம கிருஷ்ண சரிதம்"

சுவாமி சிவபவானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை

சாது அச்சுக்கூடம் சென்னை.

ஸ்ரீராம கிருஷ்ண பகவானின் திவ்விய சரித்திரத்தை வாசிக்க விரும்பாதவர் எவர்? ஸ்ரீராம கிருஷ்ணதேவர் ஒரு அவதார

புருஷனென்றும், ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்த அதே புருஷன் அவர் தேகத்தில் இராமகிருஷ்ணனாய் அவதரித்தாரென்றும் ஸ்ரீராமகிருஷ்ண பகவானே விவேகானந்தஸ்வாமிகளுக்குச் சொல்லியிருக்கிறார். சுவாமி சிவபவானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண பகவானது திவ்விய சரித்திரத்தை யாவரும் படிக்கக்கூடிய நடையில் வெகு நன்றாக எழுதியிருக்கிறார். ஆண்மக்களும் பெண்மக்களும் பெரியவர்களும், சிறியவர்களும், அதைப்படித்து ஸ்ரீபகவானது அடியிணையை வணங்கி, அவரது மஹிமையை அறிந்து அவரது அருளை அடைவார்களாக.

"எலாவற்றிலும் இறைவனைக்காணல்"

சுவாமி விவேகானந்தர் சென்னை ராமகிருஷ்ண மடம். கேசரி பிரிண்டிங்கு வொர்க்ஸ், சென்னை.

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் உபதேசங்களைப் படித்தவர்களனைவரும் அவருடைய கிரந்தங்களையும் உபந்யாஸங்களையும் மேல்மேலும் படித்துவருகிறார்கள். அவர் உபதேசிக்கும் தத்துவங்களும்மார்க்கங்களும் மனிதர்களுக்கு துக்கத்தை விலக்கிச் சுகத்தையுண்டு பண்ணக்கூடியவை. "எல்லாவற்றிலும் இறைவனைக்காணல்" என்கிற உபந்யாஸத்தில் ஸ்ரீ விவேகானந்தஸ்வாமிகள் அன்பும் பக்தியும் கலந்தது எதுவோ அதுதான் நமக்குவேண்டுமென்றும் நன்மையை விழைவோன் தீமையை விடவேண்டுமென்றும், பிரபஞ்சத்தில் என்னென்ன இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் இறைவனாகவே கருதவேண்டுமென்றும், துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் ஆசையேயாமென்றும் நாம் எண்ணின ஒவ்வொரு எண்ணமும் நாம் செய்த ஒவ்வொரு வினையும் தத்தம் பயனை நம்மில் விளைக்கின்றனவென்றும், இறைவனை எல்லாப்பொருளிலும் நாம் அமைத்து வேலை செய்ய வேண்டுமென்றும் உரைக்கிறார். இதை ஒவ்வொருவரும் வாசித்து ஞானத்தையடைவார்களாக.

நளன் அல்லது விதியின் வெற்றி.

க. இராமஸ்வாமி ஐயங்கார். பி. என். பிரேஸ், மவுண்டு ரோட்டு, சென்னை, 1929.

ம-า-า-ஸ்ரீ க. இராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள் நளனின் கதையைக் கொண்டு உயர்தமிழில் ஓர் சிறந்த நாடகத்தை எழுதியிருக்கிறார். நளன் கதை நமது தேசப்புராணக் கதைகளில் சிறந்தவைகளில் ஒன்று. நம்முடைதேசத்தவர்கள் அக்கதையை வாசிப்பதிலும் நாடகமாடப் பார்ப்பதிலும் அதிக ருசியைவஹிக்கிறார்கள். குறிப்பிடப்பட்டநாடகம் ஆசிரியரால் வெகு திறமாக எழுதப்பட்டிருக்கிறது. கற்பின்பெருமை, காதலன் கடமை அறிவின் அடக்கம் முதலிய உயர்வான விஷயங்கள் அதில் வெகுநன்றாக தொகுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. அதை வாசிப்பவர்கள் அனைவரும் இன்பத்தையுண்டாக்குவது அறமே யென்பதை அறிந்து கொள்வார்கள். ஹைஸ்கூல்களில் மாணவர்களுக்கு நான்டிடேயில்டு படிப்பில் இப்புத்தகம் உபயோகிக்கப்படக்கூடும்

இயற்கை சாஸ்திரம்

கே. துரைசாமி ஐயங்கார், குமாரஸாமி நாயுடு அண்டு ஸன்ஸ் 1929.

இப்புத்தகத்தில் வான சாஸ்திர விஷயங்களைப்பற்றியும், சீதோஷ்ணஸ்திதி, மேகங்கள், மழை இவைகளைப்பற்றியும், மதனி சரீர சாஸ்திர விஷயங்களைப்பற்றியும், தாவரங்கள், மிருகங்கள், இவைகளைச் சம்மந்தப்பட்ட விஷயங்களைப்பற்றியும் மண், எரு, உலோகங்கள் இவைகளைப்பற்றியும் இனியநடையில் அத்தியாயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கும் மத்திய வகுப்புப் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் இப்புத்தகம் வெகு உபயோகமானது.

கிராமாந்தரவிஷயங்களைப் பற்றின புத்தகங்களில் வியவஸாயத்தைப் பற்றியும், காட்டுவளர்ப்பைப் பற்றியும், ஸகாயத்தொழில்களைப்பற்றியும், பஞ்சாயத்து விஷயங்களைப் பற்றியும், கூட்டுறவு விஷயங்களைப் பற்றியும், கிராம ஆரோக்கிய விஷயங்களைப் பற்றியும், கிராம நிர்மாண விஷயங்களைப் பற்றியும், அத்தியாயங்கள் இருக்க வேண்டுமென்று சொல்வோம். கிரந்தாசிரியர் அடுத்தப் பிரதியில் இவைகளைச் சேர்ப்பாரென்று நம்புகிறோம்.

ஓர் விஞ்ஞாபனம்

சென்னை ராஜதானியிலுள்ள எல்லா பாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளுக்கும், பஞ்சாயத்தார்களுக்கும்,

காதரிதாலூக்கா தரவஸி செட்டிபள்ளி பாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டு, ம-า-า-ஸ்ரீ மாசிரெட்டி வெங்கிடசாமி ரெட்டி காரு தெரிவித்துக் கொள்வதாவது :—

1929ஸு ஜனவரி மீ 5உ ஒங்கோலில் 4வது பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் மாகாணக்கான்பரன்ஸு சித்தூர் ம-ா-ா-ஸ்ரீ B. முனுசாமி நாயுடுகாரு. B. A., B. L., M. L. C. அவர்களின் அக்ராஸனத்தின் கீழ்நடைபெற்றது.

அப்பொழுது நடந்தேறின தீர்மானங்களாவன :—

(1) கம்பவுண்டிங் பணம்மொத்தம் பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கப்படவேண்டும்.

(2) குறிக்கப்பட்ட அளவுக்குமேல் பர்மிட்டுகள் கொடுத்து வசூலானபணத்தையும் பஞ்சாயத்துகளே அடையவேண்டும்.

(3) கம்பவுண்டிங் சார்ஜை பஞ்சாயத்தார்களே நிச்சயிக்க அதிகாரம்கொடுக்கப்படவேண்டும்.

(4) மேய்ச்சல் கட்டணங்கள் ஒவ்வொரு கால்நடைகளுக்கும் குறைக்கப்படவேண்டும்.

மேல்கூறியவை தவிரவும் அனேகம் தீர்மானங்கள் நடந்தேறியன.

ஷெ தீர்மானங்கள் கவர்மெண்டாருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டன. இது நடந்து சுமார் 10மாதங்கள் ஆகியும் ஒருவிதமான பதிலும் கிடைக்கவில்லை. காரணம் பஞ்சாயத்துகளிடம் ஒற்றுமையில்லாமைதான். ஒவ்வொருஜில்லாசங்கங்களையும் கூட்டி கஷ்டநஷ்டங்களைப்பற்றி பேசி தீர்மானங்கள்செய்து, தீர்மானங்களை கவர்மெண்டாருக்கும், நமதுயூனியனுக்கும் தெரிவித்துக் கொண்டால் ஏதாவது பதில்கிடைக்கும்.

இதுவரை பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் இவ்விஷயங்களில் ஒருவிதமான முயற்சியையும் கைகொள்ளவில்லை. இனியாவது அவர்கள் தாலூக்கா சபைகளையும் ஜில்லா சபைகளையும் அமைத்து நடக்கும் வர்த்தமானங்களை ரூரல் இந்தியா பத்திராதிபருக்கும் பஞ்சாயத்து யூனியன் பிரஸிடெண்டான ம-ா-ா-ஸ்ரீ அ. ராஜகோபாலரெட்டி அவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. ஒவ்வொருதாலூக்கா ஜில்லா சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பெயரையும் தெரிவிக்கவேண்டியது.

கம்ம பாலன்

பிரதிதமிழ் மாதக்கடைசியில் வெளிவரும் சிறந்த தமிழ்ப்பத்திரிகை, நான்காம் வருடம் நடைபெறுகிறது. ஐக்கியம், சுகாதாரம், பஞ்சாயத்து, கல்வி, விவசாயம் முதலிய கிராம முன்னேற்றத்திற்கவசியமான விஷயங்கள் பிரசுரிக்கப்படுவதால் இஃதுகிராமவாசிகளுக்கின்றியமையாதது.

பத்திராதிபர் ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருடசந்தா தபாற்செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பரவிகிதத்திற்கு மானேஜருக்கெழுதுங்கள். மாதிரிக்காப்பி இலவசம். இன்றே எழுதுக.

மனேஜர், கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா, (Ramnad Dist)

அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதுகைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால கணக்கு ஒன்றாகவே இருக்க வேண்டியிருப்பதினாலும் இனி ஷேர் துகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ராஜகோபால ரெட்டி

பிரஸிடெண்டு, பாரெஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.

முகாம் :—பாலவாக்கம்

ஊத்தகோட்டை போஸ்டு

'கிராம அபிவிருத்தி" (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்

சுக்கில௵ ஐப்பசி மீ

இங்கிலீஷ் 1929—ம௵ அக்டோபர்—நவம்பர் மீ

அக்டோபர் நவம்பர்	ஐப்பசி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
17	1	வி	சசி 31-30	உத்திரட்டாதி 21-13	சி 60	துலாஸ்னானை ஆரம்பம்
18	2	வெ	○ 28-53	ரே 20-33	அ 60	பௌர்ணமி, அன்னபிஷேகம்
19	3	ச	பிர 25-8	அசு 18-38	சி 60	ஆஸ்வியபகுணம், தானியம் செலவிட
20	4	ஞா	துவி 20-23	ப * 15-20	சி 60	கிருத்திகை.
21	5	தி	திரு 15-8	கிரு 12-20	ம 12-20	சங்காஷ்ட சதுர்த்தி
22	6	செ	சது 9-25	ரோ 8-35	அ 8-35 சி	கரிநாள்
23	7	பு	பஞ் 3-18 ஷஷ் 57-53	மிரு 4-38	சி 60	சுவாதிகார்த்திகை 16-55.
24	8	வி	சப் 52-13	சதிரு 0- 3 புன 56-48	ம 0-33 அ	வித்தியாரம்பம், கிருஷியாரம்பம்
25	9	வெ	அஷ் 16-55	பூசம் 52-13-	ம 60-0-	
26	10	ச	நவ 31-58	ஆயில்யம் 50-13-	ம 50-13-அ	நவக்கிரஹசாந்திசெய்ய
27	11	ஞா	தச 37-38	மகம் 47-40-	ம 47-40 சி	சுபகாரியத்தைவிலக்க
28	12	தி	ஏகா 33-58	பூரம் 45-53	சி60	சர்வ ஏகாதசி
29	13	செ	துவா 31-3	உத்திரம் 44-53	அ44-53	
30	14	பு	திர 29-5	அஸ்தம் 44-50	ம 44-50 சி	பிரதோஷம், நரகசதுர்தசி
31	15	வி	சசி 28-15	சித் 45-48	சி 45 48 அ	தீபாவளி
1	16	வெ	அ ● 28-33	சுவா 48-3	சி60	அமாவாசை
2	17	சனி	பி 30-10	விசா 51-30-	சி 60	கார்த்திகசுத்தம் மழை
3	18	ஞா	துவி 33-0	அநு 56-3	ம 60	
4	19	தி	திரு 37-20	கே 60-0	சி 60	குளம் கிணறு வெட்ட,
5	20	செ	சது 42-33	கே 2-3	ம 2-3 அ	கரிநாள் நரகசதுர்த்திவிரதம் மாசசதுர்த்தி விரதம்.
6	21	பு	பஞ் 48-30	மூ 8-50	ம 8-50 அ	கடன்தீர்க்க
7	22	வி	ஷஷ் 54-53	பூரா 16-10	சி60	கந்தஷஷ்டி.
8	23	வெ	சப் 60-0	உத்ரா 23-38	சி 23-38 ம	
9	24		சப் 0-50	திருவோ 30-38	சி 60	மாடுவாங்க தானியம்செலவிட
10	25	ஞா	அஷ் 6-10	அவி 36-38	ம 36-38சி	
11	26	தி	நவ 10-18	சத 41-20	சி 41-20 ம	
12	27	செ	தச 12-48	பூரட் 45-43	ம 45-43அ	உத்தான ஏகாதசி
13	28	பு	ஏகா 18-25	உத்திரட் 45-30	சி 45-30ம	ஏகாதசி, யோகீசுவரதுவாதசி
14	29	வி	துவா 12-10	ரே 44-48	சி 44-48 அ	பிரதோஷம்
15	30	வெ	கிரு 9-10 (partly hidden by stamp)	அசு 42-38	அ 42-38 சி	கடைமுகம்

199387

SADHANA
AUSADHALAYA
DACCA (Bengal)

—ADHYAKHA—

Joges Chandra Ghose, M. A. F. C. S. (London)

Formerly Professor of Chemistry, Bhagalpur College.

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனாமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்) -

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4 0 0

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து, பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்னஸ்கிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0

அபல பந்தப ஜரா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி கர்ப்பப்பை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும் 16 டோஸ் ரூ. 2. 50 டோஸ் ரூ 5

அம்ருதாஞ்சனம்

என்றாலென்ன ?

தலைநோய், பக்க நோய், இல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், சைத்யம்

சளுப்பு, மார்சளி

உப்பசம், மார்மூச்சு

கழுத்து சளி, ரத்தம் விழுதல்

சந்திவாய்வு, சீழ் விழுதல்,

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துசல், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும் ! போக்கும் !! போக்கும் !!

மூன்று திசைகளிலும் போக்கும்.

அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்

Published by Mr. *A. Rajagopala Reddi*, President, Forest Panchayatdars Union Ltd. Madras.
Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS
CHINGLEPUT